தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 60 மலர் : 10

உள்ளுறை

1. குற்றியலுகரமும் புள்ளியும் ... 433

முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்,
துணைப் பேராசிரியர்,
அரசர் கல்லூரி, திருவையாறு.

2. புறத்திணைத்துறைப் பாகுபாடும் சமூகப்பின்னணியும் 439

பெ. மாதையன்
தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.

3. அறிவியல் தமிழ் ஓர் மதிப்புரை நோக்கு ... 451

4. களஞ்சியம் 458

அறிவியல் துறை காலாண்டு இதழ்
முதற்றெகுதி-முதலிதழ் மதிப்புரை

5. கதையாசிரியர்களும் உத்திகளும் 463

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
பேராசிரியர் இரா. சண்முகவேலன்,
தமிழ்த்துறை,
அ. வீ. வா. நி. புட்பங்கல்லூரி, பூண்டி.

6. பாரதியின் புதிய ஆத்திசூடி ... 475

சு. பாரதி
தமிழ்த்துறை.
காயிதே மில்லத் அரசு,
மகளிர் கல்லூரி, சென்னை - 2.

* இதழினுள் பக்க எண்கள் பிழையாக அச்சிடப் பட்டுள்ளன, திருத்திக்கொள்க.

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2017

துணர்: 60 அட்சய — தை மலர்: 10

ஜனவரி — பிப்ரவரி 1987

குற்றியலுகரமும் புள்ளியும்

முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்,
துணைப் பேராசிரியர்,
அரசர் கல்லூரி, திருவையாறு.

முன்னுரை

தொல்காப்பியர் (தொல் எழுத்து 1, 2) உயிரெழுத்துக்கள் பன்னிரண்டையும் மெய்யெழுத்துக்கள் பதினெட்டையும் முதலெழுத்துக்கள் என்றும் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்ற மூன்றையும் சார்பெழுத்துக்கள் என்றும் பாகுபாடு செய்கின்றார். குற்றியலுகரம் பற்றிக் கூறும் நூற்பாக்களில் குற்றிய

லுகரமும் அற்றெனமொழிப'' (தொல் எழுத்து 106) என்பதும் ஒன்றாகும். இந்நூற்பாவிற்குப் பிற்காலத்தில் எழுந்த கருத்து வேறுபாடுகளின் வன்மை, மென்மைகளை ஆய்ந்து தொல்காப்பியரின் கருத்து எதுவாக இருக்கும் என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குற்றியலுகரமும் மெய்யும்

தொல்காப்பியர் மொழிமரபில் மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துக்களைத் தனித்தனியே கூறிவிட்டு மீண்டும் புணரியலில் (தொல் எழுத்து. 104) மொழிக்கு முதலில் வரும் இருபத்திரண்டு எழுத்துக்களையும் மொழிக்கு இறுதியில் வரும் இருபத்து நான்கு எழுத்துக்களையும் நினைவுபடுத்துகின்றார் பிறகு மொழியின் ஈற்றில் மெய் வந்தால் அது புள்ளி பெற்று நிற்கும் என்று கூறுகின்றார்.

அவற்றுள் ;

மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையில் (தொல் எழுத்து 105) இதைத் தொடர்ந்து வரும் நூற்பா.

குற்றியலுகரமும் அற்றென மொழிப (தொல் எழுத்து 106) என்பதாகும். இந் நூற்பாவிற்குப் பொருள் கொள்ளும்போது உரையாசிரியர்களும் இலக்கண அறிஞர்களும் பலவித கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் நிலைமொழிப் புள்ளியீற்றின் முன் வருமொழி உயிர் தனித்தியங்காது மெய்யைச் சார்ந்து உயிர்மெய் ஆவதைப் போன்று (ஆல்—இலை→ஆலிலை) நிலைமொழிக் குற்றியலுகரத்திற்கு முன் உயிர்முதல் வருமொழி வரும்போது குற்றியலுகரம் கெட்டு வருமொழி உயிர், மெய்யைச் சார்ந்து வரும் (நாக்கு—இல்லை → நாக்கில்லை) என்ற கொள்கையைக் கொண்டிருக்கின்றனர். இக்கருத்தையே பவணந்தி முனிவரும்

உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும் (நன். 164) எனத் தொடங்கும் நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

"குற்றிய லிகரமும் குற்றிய லுகரமும்
மற்றவை தாமே புள்ளி பெறுமே"

எனச் சங்க யாப்பில் குறிக்கப்பட்டுள்ளதை யாப்பெருங்கல விருத்தி ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இக்கருத்தைத் தொடர்ந்து பிற்கால அறிஞர்கள் குற்றியலுகரமும் குற்றியலிகரமும் புள்ளிபெறும் எனக்

கூறுகின்றனர். (பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி 1937, நூற்பா. 106; தா. ஏ ஞானமூர்த்தி, 1972:91; சிவலிங்கனார், 1972 : 104). இவ்வாறு கருத்து முரண்பாடு ஏற்படுவதற்குத் தொல்காப்பியத்தில் சான்று உண்டா அல்லது பிற்காலத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதா என்பதைக் காணலாம்.

புணர்ச்சியில் எழுத்துக்கள்

புணரியலில் மீண்டும் மொழிமுதல் மொழி இறுதியில் வரும் எழுத்துக்களைக் குறிப்பிடுவதற்குக் காரணம் நிலைமொழி ஈற்றையும் வருமொழி முதலையும் குறிப்பிடுவதற்கேயாகும். கீழ்க் காணும் நூற்பாவில் நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் வரும் எழுத்துக்களைக் குறிப்பிடுகின்றார்.

உயிரிறு சொல்முன் உயிர்வரு வழியும்
உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும்
மெய்யிறு சொல்முன் உயிர்வரு வழியும்
மெய்யிறு சொல்முன் மெய்வரு வழியும் ...

(தொல். எழுத்து 108)

நிலைமொழி		வருமொழி
— உயிர்	+	உயிர் —
— உயிர்	+	மெய் —
— மெய்	+	உயிர் —
— மெய்	+	மெய் —

தொல்காப்பியர் இவ்வாறு குறிப்பிடுவதால் தமிழ்மொழியின் அமைப்பையும் விளங்கிக்கொள்ள முடிகின்றது. தமிழ் எழுத்துக்கள் உயிர், மெய், உயிர்மெய் என்ற மூன்று பாகுபாட்டில் அமைந்தாலும் புணர்ச்சி என்று வரும்போது உயிரும் மெய்யுமே கணக்கிடப்படு கின்றன. உயிர்மெய் மெய் + உயிர் எனப் பிரித்துக் கணக்கிடப்படு கின்றது. நிலைமொழியின் உயிர்மெய் ஈறு உயிர்று போலக் கொள்ளவேண்டும் என்பதைத் தொல்காப்பியர்.

உயிர்மெய் யீறும் உயிரீற் றியற்றே (தொல். எழுத்து. 107) என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். வருமொழியின் முதல் உயிர் மெய் ஆயின் மெய்யை முதலாக உடையது 'மெய்யிறு சொல்முன் மெய்வரு வழியும்.' (தொல் எழுத்து. 108) என்ற நூற்பா வரியின் மூலம் அறிந்து கொள்ளலாம். நிலைமொழியின் ஈற்றில் ஒருமெய்புள்ளி பெற்றுத் தனித்து நிற்கலாம்; ஆனால் வருமொழியின் முதலில் ஒரு மெய் இருப்பின் அது தனித்து நிற்காது. ஓர் உயிரையே சார்ந்து நிற்கும். எனவே, மெய் + மெய் புணர்ச்சியில் இரண்டுமே மெய்

என்றாலும்நிலைமொழியின் மெய் தனித்து நிற்கும் ஆற்றல் பெற்றது. வருமொழியின் மெய் தனித்து நிற்கும் ஆற்றல் அற்றது. நூன்மரபில் மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் (தொல். எழுத்து 15) என்று குறிப்பிடுவது மெய்யெழுத்தின் வடிவம் புள்ளி பெற்று அமையும் என்பதையாகும். ஆனால் புணரியலில்

அவற்றுள்
மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல் (தொல் எழுத்து. 105) என்று குறுப்பிடுவது வருமொழியின் மெய்யிலிருந்து நிலை மொழியின் மெய்யை வேறுபடுத்திக் காண்பதற்கேயாகும். நிலை மொழியின் ஈற்றில் மெய் வரும்போது வருமொழி உயிர் அல்லது உயிர்மெய்யை முதலில் பெற்றிருக்கலாம். மெய்யும் உயிரும் வரும் போது உயிர் தனித்தியங்காது நிலைமொழி ஈற்றின் மெய்யைச் சார்ந்து வரும். இதைத் தொல்காப்பியர்,

புள்ளி ஈற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே
(தொல். எழுத்து. 138)

எனக் குறிப்பிடுகின்றார்.

குற்றியலுகரம் வருமிடம்

தொல்காப்பியர் முதலில் மொழிமரபு நூற்பாவில் குற்றியலுகரம் வரும் இடங்களைக் குறிப்பிடுகின்றார்.

நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே (தொல் எழுத்து. 36)

(மெய்) - நெட்டுயிர் - வல்லெழுத்துக் குற்றுகர அமைப்பு, அது அல்லாத பிற தொடர்மொழிக் குற்றியலுகரம் எனப் பாகுபாடு செய்த தொல்காப்பியர், குற்றியலுகரப் புணரியலில் விரித்து அறுவகையான குற்றியலுகரத்தைக் கூறுகின்றார்.

ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்
ஆயிரு மூன்றே உகரங் குறுகிடன் (தொல். எழுத்து. 407)

நன்னூலாரும் முறையே,

நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடை
தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே (நன். 94)

குற்றியலுகர வகை	அமைப்பு		சான்று
நெ.தொ.கு.உ	(மெய்) உ	வல். மெய் + கு.உ	நாகு
ஆ.தொ.கு.உ	(மெம்) ஃ		எஃகு
உ.தொ.கு உ	(மெய்) உ மெய் உ		வரகு, பலாசு
வல்.தெர.கு.உ	...... வல். மெய்		கொக்கு
மெல்.தொ.கு.உ.	...... மெல். மெய்		தெங்கு
இ தொ.கு.உ	...... இடை மெய்		அல்கு

(மெய்) மொழி முதலில் வரலாம்; வராமலும் இருக்கலாம். உ. உ குற்றுயிர் உ நெட்டுயிர் .... எந்த அமைப்பிலும் எழுத்துக்கள் இருக்கலாம்.

மாற்றொலிக் கொள்கை

சூழ்நிலையால் கட்டுண்டு ஓர் ஒலி வெவ்வேறு இடங்களில் தொடர்புடைய வேறுவேறு ஒலிகளாக ஒலிக்கப்படுவதை மொழியலார் ஓர் ஒலியனின் மாற்று ஒலி என்பார். கசதப என்னும் நான்கு வல்லெழுத்துக்களும் மொழி முதலிலும் இரட்டித்து வரும் போதும் ஒலிப்பிலா ஒலி (voiceless)-யாகவும் இரண்டு உயிர்களுக்கு இடையில் உரசொலி (frieative)-யாகவும் ஒலிக்கின்றன என்பர்.

கப்பல் Kap, al	பக்கம் Pakkam	ஒலிப்பிலா ஒலி
மகன் maxan		உரசொலி
தங்கம் tangam		ஒலிப்புடை ஒலி

ஒரே ஒலி (க) சூழ்நிலையால் கட்டுண்டு தொடர்புடைய வேறுவேறு ஒலிகளாக ஒலிக்கப்பட்டாலும் எழுத்து வடிவில் அமையும் போது ஒரே எழுத்து (க) மட்டுமே எழுதப்படுகின்றன. இதே நிலையில் குற்றியலுகரத்திற்குத் தொல்காப்பியர் இடமும் பற்றுக்கோடும் குறிப்பிடுவது அவரது நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகின்றது. குற்றியலுகரம் அரை மாத்திரை ஒலிப்பளவைப் பெற்றிருந்தாலும் அது உகரத்தின் குறுகிய ஒலி வடிவமே அது முற்றுகரம் வரும் இடங்களில் வராது. சந்தனக்கோல் குறுகின விடத்துப் பிரப்பங்கோல் ஆகாது. அதுபோல, இகர உகரங்கள் குறுகினவிடத்தும் அவை உயிர் ஆகற்பாலன' (தொல். எழுத்து. 2) என்றும் 'நெட்டெழுத்திம் பரும் தொடர்மொழியீறும் இடம். வல்லெழுத்து பற்றுக்கோடு' (தொல். எழுத்து. 36) என்றும் இளம்பூரணர் தரும விளக்கங்கள் தொல்காப்பியரின் 'குற்றியலுகர புணர்ச்சியில் மெய்போலச் செயல்படும்' என்ற கருத்துக்கு அரண் செய்யும் வகையில் உள்ளன.

முடிவுரை :

மேலே கூறிய விளக்கங்களைக் கொண்டு பார்க்கும்போது 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' என்னும் நூற்பாவிற்குப் புணர்ச்சியில் குற்றியலுகரம் மெய்போலச் செயல்படும் என்று இளம் பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறும் கருத்தே தொல்காப்பியரின் கருத்தோடு தொடர்புடையதாக இருக்கின்றது. ஓர் ஒலி நிற்கும் இடமும் பற்றுக்கோடும் கூறிய பிறகு குறியீடு கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்ற இக்கால மொழியியல் கருத்துக்குத் தொல்காப்பியரின் கருத்து அரண் செய்வதாக அமைகின்றது. இதை விடுத்துப் பிற்காலத்தார் குற்றியலுகரத்திற்குப் புள்ளியிட்டு எழுத வேண்டும் என்று கூறுவது பொருத்தம் உடையதாகத் தெரியவில்லை.

துணை நூற் பட்டியல்

1. அகத்தியலிங்கம், ச. முருகையன், க. பதிப்பர் — தொல்காப்பிய மொழியில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1972.
2. சுப்பிரமணிய சாஸ்திரி, பி. எஸ்., — தொல்காப்பியம்-எழுத்ததிகாரம்-குறிப்புரை, திருச்சி, 1937.
3. பவணந்தி முனிவர், — நன்னூல், கழக வெளியீடு, 1968
4. தொல்காப்பியர் — தொல்காப்பியம்-எழுத்ததிகாரம்-இளம் பூரணர் உரை, கழக வெளியீடு 1972
5. ,, — தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் - நச்சினார்க் இனியர் உரை, கழக வெளியீடு, 1972.

புறத்திணைத்துறைப் பாகுபாடும் சமூகப்பின்னணியும்

பெ. மாதையன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தமது ஆட்சிப்பரப்பைப் பெருக்கிக்கொள்ள வேண்டியும் ஏனைய சமுதாயத் தலைவர்களைத் தம்கீழ்ப்பட்டு ஆள்வோராய் அடிமைப்படுத்திக்கொள்ள வேண்டியும் முயன்ற வேந்தர்களிடம் மாடுபிடி சண்டைகளைக் காண இயலவில்லை. இவர்களின் நோக்கமெல்லாம் நிலக் கொள்ளைகளாகவே இருந்திருக்கின்றன

புறத்துறைகளும் சமூகப்பின்னணியும்

உடைமைகளின் வளர்ச்சிக்கு ஒப்பப் போர்முறைகளிலேயும் போருக்கான நோக்கங்களிலும் மாற்றங்கள் நிலவியதைப்போன்று சில காலச் சூழல்கள் சில துறைப் பாடல்களின் தோற்றுவாய்க்குக் காரணமாய் அமைந்திருக்கின்றன. மகட்பாற்காஞ்சி, ஏர்க்கள உருவகம், செவியறிவுறூஉ, பரிசில்கடாநிலை என்பனபோன்ற துறைகளை இதற்குச் சான்றாய்க் காட்டலாம்.

முதுகுடி மன்னர்களின் மகளிரை (மணக்க) வேண்டல்வழி அவர்தம் மருதநில வயல்களை வேந்தர்கள் கைப்பற்ற முனைந்த தொரு காலச்சூழலை மகட்பாற்காஞ்சித்துறைப் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

மருதநிலப் பொருளாதார மேம்பாடு உணரப்பட்டு அதற்கான வழிகளில் ஈடுபட்டுத் தண்பணை வேந்தர்களாய் உயர்ந்த வேந்தர்களின் மேம்பாட்டுக்குப் பின்னர் போர்க்களங்களும் ஏர்க்களங்களாய் உருவகித்துப் பாடப்பெற்றன. மருதநில மேம்பாட்டுக்குப் பின்னர்தான் ஏர்க்கள உருவகப் பாடல்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன.

வேந்தர்களின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை எடுத்துக் கொண்ட புலவர்கள் அவர்களின் நன்மையைக்கருதி அவர்தம் ஆக்கத்திற்குரிய நன்மைகளை அறிவுறுத்தத் தொடங்கிய தன்மையை செவியறிவுறூஉப்பாடல் விளங்குகின்றன. வேந்தர்களின் வரையறுத்த கொடையால் வரிசையறிதலால் வருந்திய புலவர்களின் வறுமைப்புலம்பல்களைப் பரிசில்கடாநிலைப் பாடல்கள்

உரைக்கின்றன. சங்ககாலச் சமூகப் பின்னணியோடு புறத்துறைகளையும் ஆராய்கின்ற பொழுதுதான் துறைகளின் தோற்றுவாய்க்கான உண்மைக் காரணங்களை அறிந்துகொள்ள இயலும்.

வல்லாண் முல்லை, இயன்மொழி பாடும் மரபுகள்

புறநானூற்றில் இயன்மொழி, வல்லாண்முல்லை எனும் இரு வகைத்துறைகளும் சிலவரையரைக்குட்பட்டனவாய் அமைந்துள்ளன. இயன்மொழி வேந்தர்க்கும் குறுநில மன்னர்க்கும் உரியதாய்ப் பாடப்பட்டுள்ளது அல்லது அமைந்துள்ளது. வல்லாண்முல்லை என்பது வன்புலச் சமுதாயத் தலைவர்களான சீறூர் மன்னர்கள் மீது பாடப்பட்டுள்ளது. எனினும் சிலவிடங்களில் வேந்தர்க்கு உறுதுணையாய் நின்ற குறுநிலமன்னரும்[18] வல்லார்கிழான் பண்ணன் எனும் மன்னனும் வல்லாண்முல்லைத் துறையால் பாடப்பட்டுள்ளனர்.[19] இவர்களில் பிட்டங்கொற்றன் இயன்மொழியாலும் புகழப்பெறுகிறான். ஆனால் வேந்தர்க்கோ குறுநிலமன்னரில் கடையெழு வள்ளல்களுக்கோ வல்லாண்முல்லை பாடப்பெறவில்லை. இயன் மொழிகளால் மட்டுமே இவர்கள் பாடப் பெற்றுள்ளனர். இதைப்போன்றே சீறூர்மன்னர்கள் வல்லாண் முல்லையால் மட்டுமே பாடப்பெற்றுள்ளனரே அன்றி இயன்மொழியால் பாடப்பெற்றிலர்.

1. வேந்தர்கள், கடையெழு வள்ளல்கள் — இயன்மொழி மட்டும்
2. சீறூர்மன்னர்கள் — வல்லாண்முல்லை மட்டும்
3. ஏனையோர் — இயன்மொழி, வல்லாண் முல்லை இரண்டும்

என்கின்ற நிலையிலேயே இவ்விரு துறைகளும் புறநானூற்றில் அமைந்துள்ளன.

அதியமான் நெடுமானஞ்சியும் இயன்மொழியும்

இத்தகைய துறைபாடும் மரபுகளை இங்கே எடுத்துரைப்பதன் அடிப்படைக்காரணமே கடையெழுவள்ளல்களில் ஒருவனான அதியமானைப் பற்றிய பாடலொன்று தவறுதலாக வல்லாண் முல்லை எனத்துறை பெற்றிருப்பதுடன் நெடுமானஞ்சி — ஒரு தலைவன் என உரைக்குறிப்பும் பெற்றிருப்பதேயாகும்.

"உடைய வாயி னுண்ணவும் வல்லன்
கடவர் மீது மிரப்போர்க் கீயும்
மடவர் மகிழ்துணை நெடுமா னஞ்சி

இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போலத்
தோன்றா திருக்கவும் வல்லன் மற்றதன்
கான்றுபடு கனையெரி போலத்
தோன்றவும் வல்லன்றான் றோன்றுங்காலே'' (புறம். 315)

மேற்சுட்டிய அதியனைப் பற்றிய பாடல் இதுவே. இப்பாடல் 'திணையும்' துறையும் அவை; நெடுமானஞ்சியை ஔவையார் பாடியது. எனும் அடிக்குறிப்பினைப் பெற்றுள்ளது.

''யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்
கருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை
என்வாய்ச் சொல்லு மன்ன வொன்னார்
கடிமதி லரண்பல கடந்த
நெடுமா னஞ்சி நீ யருளன் மாறே (புறம். 92)

எனும் இப்பாடல் 'திணையும் துறையுமவை (இயன்மொழி); அவனை அவர் பாடியது (அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது) எனும் அடிக்குறிப்பினைப் பெற்றுள்ளது. இப்பாடல் அதியனைப் பற்றிய பாடல் வரிசையிலே இடம்பெற்று இயன்மொழி எனத்துறை பெற்றுள்ளது. இப்பாடலிலும் 'நெடுமானஞ்சி' எனப்பெயர் வந்துள்ளது. இவ்வரிசையில் இடம் பெறாத 315 ஆம் பாடல் வல்லாண்முல்லை எனத் துறை பெற்றுள்ளது. இப்பாடலிலும் 'நெடுமானஞ்சி' எனப் பெயர் இடம் பெற்றுள்ளது. இப்பாடலுக்கு உ. வே. சாமிநாதையர் ***நெடுமானஞ்சி - ஒரு தலைவன்***[21] என உரைக்குறிப்பு எழுதியுள்ளார். ஔவை துரைசாமிபிள்ளை இப்பாடலின் தலைப்பில் அதியமான் நெடுமானஞ்சி எனவே குறிப்பிட்டு அதியமானைப் பற்றிய பாடலாகவே கொண்டுள்ளார். இருவரும் துறையை வல்லாண்முல்லையாகவே கொண்டுள்ளனர். உ. வே. சா. நெடுமானஞ்சி ஒரு தலைவன் என்று குறிப்பிடுவதும் இப்பாடல் வல்லாண்முல்லை எனத் துறைபெற்றிருப்பதும் எவ்வகையிலோ நேர்ந்த பிழையேயாகும்.

பாடலிலே வரும் நெடுமானஞ்சி என்பதை அதியமான் நெடுமானஞ்சி என்றே கொள்ளவேண்டும். இது ஔவையார் பாடிய பாடலாக இருப்பதாலும் பாடலிலேயே நெடுமானஞ்சி என்று பெயர் வருதலாலும் 'சிறியகட் பெறினே'[23] எனும் பாடலின் பாடு பொருளுடன் ஔவையின் இப்பாடற்கருத்தும் ஒத்தே இருப்பதனாலும், ஏனைய பாடல்களில் (குறிப்பாக 'யாழொடுங் கொள்ளா' எனும் பாடலில்) நெடுமானஞ்சி எனும் குறிப்பு

வருகின்றபோது அவை அதியனைப் பற்றிய பாடல்களாகவே கொள்ளப்படுவதாலும் இதனையும் நாம் அதியனைப் பற்றிய பாடலாகவே கொள்ள வேண்டும்.

இப்பாடல் வல்லாண்முல்லை எனத் துறைபெற்றுள்ள காரணத்தால்தான் உ. வே. சாமிநாதையர் (வல்லாண்முல்லை பாடும் மரபு சீறூர்த்தலைவர்க்கே உண்டென்பதால்) நெடுமானஞ்சியை அதியமானாய்க் கொள்ளாது ஒரு தலைவன் எனக் குறிப்பிட்டுள்ளார். 'இல்லும் பதியும் இயல்பும், கூறி நல்லாண்மையை நலமிகுத்தன்று'[24] எனப் புறப்பொருள்வெண்பாமாலை சுட்டும் வல்லாண்முல்லை இலக்கணத்திற்குத்தக உ. வே. சாமிநாதையர் 'இல்லிறைச் செரீஇய ஞெலிகோல்' என்பதற்கு 'அவன் வீட்டின் இறப்பிற் செருகப்பட்ட தீக்கடைகோலைப் போலத் தன்வலி வெளிப்பட வேண்டாத காலத்து அடங்கி இருக்கவும் வல்லன்'[25] என (அவனது இல்லின் இறைப்பு) உரையெழுதியுள்ளார். இங்கே நெடுமானஞ்சி எனும் தலைவனது இல்லம் உரைக்கப்பட்டதாய்க் கொண்டு வல்லாண்முல்லைத் துறையின் இலக்கணத்திற்கேற்ப உரைகொண்டுள்ளார். இங்ஙே அவன் இல்லின்கண் என்று பொருள் விரிக்காது இல்லின் இறைப்பில் எனப் பொதுவாய்க் கொள்ள வேண்டும். கடையெழு வள்ளல்களைப் பற்றிய பாடல்கள் இத்துறை பெறாது இருத்தலாலும் மிகப் பெரும்பாலும் சிறூர்த் தலைவரைப் பற்றிய பாடல்களே வல்லாண்முல்லைத் துறை பெற்றிருத்தலாலும் உ. வே. சாமிநாதையர் நெடுமானஞ்சியை ஒருதலைவன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

புறநானூற்றுப் பாடல்களும் பாடுபொருளுக்குப் பொருந்தாத் துறைப்பாகுபாடும் :

எவ்வகையிலோ அதியமானைப் பற்றிய பாடல்வரிசையிலே இடம் பெறாது போய்விட்ட இப்பாடல் வல்லாண்முல்லைத்துறைப் பாடல்களினூடே அமைந்துவிட்ட காரணத்தால் இயன்மொழி என இருக்கவேண்டிய இப்பாடலின் துறை முன்பின்னமைந்த பாடல்களின் துறைத்தொடர்பால் வல்லாண்முல்லை எனக் குறிப்பிடப்பட்டுவிட்டது. இவ்வாறே முன்பின்னமைந்த பாடல்களின் துறைபெற்ற, பாடலின் பாடுபொருளுக்கும் குறிப்பிடப் பெற்ற துறைக்கும் தொடர்பில்லாத பாடல்களும் புறநானூற்றில் உள்ளன. எடுத்துக்காட்டாக மூதின்முல்லை, வல்லாண்முல்லைத் துறைப் பாடல்களைச் சுட்டலாம். புறநானூற்றில் 326 முதல் 335 வரையிலான பாடல்கள் அனைத்தும் மூதின்முல்லைத் துறையினவாய்க் குறிப்பிடப்பட்டுள்ளன. 326 ஆம் பாடலில்

"அருமிளை யிருக்கை யதுவே மனைவியும்
வேட்டச் சிறாஅர் சேட்புலம் படராது
படுமடைக் கொண்ட குறுந்தா ளுடும்பின்
விழுக்கு நிணம் பெய்த தயிர்க்கண் மிதவை
யாணர் நல்லவை பாணரொ டொராங்கு
வருவிருந் தயரும் விரும்பினள் ..."

எனச் சீறூர்த்தலைவியின் விருந்தோம்பும் பண்பு பாராட்டப் பெற்றிருத்தலால் இப்பாட்டினை மூதின் முல்லை என்று குறித்திருப்பது பொருத்தம். ஆனால் 327 முதல் 331 முடிய உள்ள பாடல்கள் சீறூர் மன்னரின் மறமாண்பையும் கொடை மாண்பையுமே பாடுகின்றன. இருந்தபோதிலும் இவை மூதின் முல்லைத் துறைப்பாடல்களாய்க் குறிப்பிடப்பெற்றுள்ளன. இத்துறை, இப்பாடல்களின் பாடுபொருளுக்குப் பொருந்துவதா யில்லை. சீறூர்மன்னரின் கொடையையும் வீரத்தையும் மட்டுமே பாடுகின்ற இப்பாடல்கள்[26] சீறூர்த்தலைவியரின் கொடைப் பண்பையோ வீரமாண்பையோ பாடுபொருளாய்க் கொண்டிராக் காரணத்தால் இவற்றை வல்லாண்முல்லைப் பாடல்களாய்க் கொள்வதே பொருத்தம்.

புறநானூற்றில் 332 ஆம் பாடல் சீறூர் மன்னன் ஒருவனின் வேல்வழி வீரச்செயல்களைப் புகழ்கின்றது. வேலின் பெருமையைப் பாடும் இப்பாடல் வல்லாண்முல்லை எனத்துறைபெற்றுள்ளது அதியமானைப் பற்றிய பாடலொன்று (புறம். 95) அவனது வேல் முதலிய படைக்கலன்களின் பெருமையைப் பாடுகின்றது. இப் பாடலுக்கு வாள்மங்கலம் எனத் துறைகுறிக்கப்பட்டுள்ளது. ஆனால் சீறூர்மன்னனின் வேல்மாண்புகளைப் பாடுகின்ற 332 ஆம் பாடல் வாள்மங்கலம் எனும்துறைபெறாது வல்லாண்முல்லை எனத் துறைபெற்றுள்ளது. இதுவும் இங்கே சிந்திக்கத்தக்கது.

இதுவரை எடுத்துக்காட்டப்பட்ட பாடல்கள் தத்தம் பாடு பொருளுக்கு ஏற்பத் துறைபெறாது முன்னமைந்த பாடல்களின் துறையையே தவறுதலாகப் பெற்றுள்ளன. இதைப் போன்றே அதியமானைப் பற்றிய பாடலும் பாடுபொருள், பாட்டுடைத் தலைவன், சமுதாயத்தலைவர்களில் அவரவரைப் பாடக் கையாளப் பெற்ற துறைநெறி இவற்றை அடிப்படையாகக் கொண்டு துறை பெறாமல் முன்பின்னமைந்த பாடல்களின் துறையையே பெற்றுவிட்டது.

முடிவுரை

இதுவரை ஆய்ந்த செய்திகளின் அடிப்படையில் பின்வருவன வற்றை ஆய்வு முடிவுகளாய்க் கொள்ளலாம்.

1. "தன் பகைவனோடு போர் தொடங்குவதன் அறிகுறியாக ஒருவேந்தன் மற்றவனின் பசுக்கூட்டத்தைக் களவிலே சென்று கவர்ந்து வருவது வழக்கம். போர் தொடங்கும் பண்டைய நெறி இதுவேயாகும்."

என மரபுவழிப்பட்டு நமது ஆய்வாளர்கள் கருதுவதைப் போன்று ஒவ்வொரு சமுதாயமும் வெட்சி-கரந்தை, நொச்சி-உழிஞை, தும்பை-வாகை என்ற வரிசைமுறையில் போர்களை மேற் கொள்ளவில்லை. இம்மாடுபிடி சண்டைகள் வேந்தர் சமுதாயப் போர்முறையில் ஒருகூறன்று. போரைத் துவக்குவதற்கான அறிகுறியுமன்று. இம்மாடுபிடி சண்டைகள் கால்நடைப் பொருளாதாரத்தை அடிப்படையாய்க் கொண்டுவாழ்ந்த சமுதாயத்தின் போர்முறையே ஆகும். வேந்தரின் மருதநிலச் சமுதாயங்களில் நிலக்கொள்ளை, மதிலழித்தல் முதலான நாடுபிடி சண்டைகளை மட்டுமே காணமுடிகிறது. ஆக, சமுதாய வளர்ச்சிக்கும் உடைமை வளர்ச்சிக்கும் ஒப்பப் போர்முறைகளிலே/ போர்நோக்கங்களிலே மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. அவ்வக்காலச் சமுதாயத்தின் இயல்பை அடிப்படையாகக் கொண்டே வெட்சி கரந்தை முதலான புறத்திணைகளை ஆராய்தல் வேண்டும். இப்போர்முறைகளை ஒவ்வொரு சமுதாயமும் வரிசைக்கிரமமாய் மேற்கொண்டது என்பதோ மாடுபிடிசண்டைகள் போரைத் துவக்குவதற்கான அறிகுறி என்பதோ பொருந்தாது வரலாற்றுணர்வோடும் சமூக வளர்ச்சிப் போக்கோடும் இணைத்தே ஆய்தல் வேண்டும்.

2. இதைப் போன்றே புறத்திணையின் எல்லாத் துறைகளும் (துறைப்பொருண்மைகளும்) எல்லாக் கால கட்டங்களிலும் எல்லாச் சமுதாயங்களிலும் நிலவியிருந்தன எனக் கொள்ள இயலாது. சீறூர்மன்னரின் வன்புலச் சமுதாயங்களில் மகட்பாற்காஞ்சி, செவியறிவுறூஉ என்பன போன்ற துறைப் பாடல்களைக் காண வியலாது. மருதநிலச் சமுதாயங்களின் வளர்ச்சி சில துறைப் பொருண்மைகளின் தோற்றுவாய்க்குக் காரணமாய் அமைந்திருக் கிறது. ஒவ்வொரு புறத்துறையின் தோற்றுவாய்க்கும் சில சமூகப் பின்னணிகள் காரணமாய் அமைந்திருக்கின்றன. இவ்வடிப் படையிலேயே திணைத்துறைப் பாகுபாட்டிற்கான சமூக அடிப்படைகளை ஆராய்தல் வேண்டும்.

3. வல்லாண்முல்லை, இயன்மொழி, மூதின்முல்லை பாடுதலில் சில மரபுகள்/வரையறைகள் பின்பற்றப்பட்டிருக்கின்றன. சீறூர் மன்னரின் கொடையையும் வீரத்தையும் புகழும் பாடல்களுக்கு வல்லாண்முல்லை எனவும் வேந்தரின் கொடையையும் வீரத்தையும் பாடும் பாடல்களுக்கு இயன்மொழி எனவும் துறை குறிக்கப் பட்டுள்ளது. இதனை ஒத்தே மூதின் முல்லைப் பாடல்கள் சீறூர்த் தலைவியரின் வீரத்தையும் விருந்தோம்பும் பண்பினையும் பாடுவனவாய் உள்ளன. சமுதாயத்தோடு இரண்டறக்கலந்து குடிகளோடு குடிகளாய் வாழ்ந்த சீறூர்த் தலைவியரைப் போல அன்றி உடைமைப் பெருக்கத்தால் அந்தப்புர மகளிராய் அரண்மனைப் பெண்டிராய் வாழ்ந்த வேந்தரின் தலைவியர் இவ்வாறு பாடப்பெற்றிலர். பாடுபொருள் ஒன்றாயினும் உடைமைத் தன்மைக்கேற்பத் துறைப்பெயர்களிலும் மாற்றங்கள் நிகழ்ந் துள்ளமையை இவற்றால் உணரலாம்.

4 புறநானூற்றின் பாடல்களில் சில முன்னமைந்த பாடல் களின் தொடர்பால் பாடுபொருளுக்குப் பொருந்தாத் துறைப்பாகு பாட்டினைப் பெற்றுள்ளன. இத்தகைய பாடல்களுக்கான துறை, பாடுபொருள், பாடப்பட்டோர், அவர்களின் சமூகப் பின்னணி இவற்றை அடிப்படையாய்க் கொண்டு வரையறுக்கப்படவேண்டும்.

5. புறநானூற்றில் சில பாடல்கள் பிழையாய் முன் பின்னமைந்த பாடல்களின் துறையைப் பெற்றிருத்தல், 315 ஆம் பாடலிலேயே நெடுமானஞ்சி என்ற குறிப்பு வருதல், இப்பாடலை ஔவையார் பாடியிருத்தல், இப்பாடலின் பாடுபொருள் அதியனை ஔவையார் பாடிய சில பாடல் பாடுபொருளோ ஒத்துவருதல், கடையெழுவள்ளல்களுக்கு வல்லாண்முல்லை பாடும் மரபு இல்லாதிருத்தல் என்பன போன்ற காரணங்களை அடிப்படையாய்க் கொண்டு புறநானூற்றின் 315 ஆம் பாடலின் துறையை இயன் மொழியாகவும் பாட்டுடைத் தலைவனை அதியமான் நெடுமானஞ்சி யாகவும் கொள்ளவேண்டும்.

அடிக்குறிப்புகள் :

1. கா. சின்னத்தம்பீ, 'திணைக்கோட்பாட்டின் சமூக அடிப்படைகள்', ஆராய்ச்சி ஜூலை 1977, ப. 341, எனும் கட்டுரையில் மேற்கோளிலிருந்து.
2. மேற்படி கட்டுரை, ப. 341
3. புறநானூறு, 335.

4. தனிகொண் முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே (புறம். 109)

5. வட்ட வரிய செம்பொறிச் சேவல்
ஏனல் காப்போ ருணர்த்திய கூஉம்
கானத் தோர்நின் றெவ்வர் நீயே
புறஞ்சிறை மாக்கட் கறங்குறித் தகத்தோர்
புய்த்தெறி கரும்பின் விடுகழை தாமரைப்
பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்தர்
ஆடுகளங் கடுக்கும் அகநாட் டையே (புறம். 28)

6. பெருவிறல் யாணர்த் தாகி யரிநர்
கீழ்மடைக் கொண்ட வாளையு முழவர்
படைமிளிர்ந் திட்ட யாமையு மறைநர்
கரும்பிற் கொண்ட தேனும் பெருந்துறை
நீர்தரு மகளிர் குற்ற குவளையும்
வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தயரும்
மென்புல வைப்பி னன்னாட்டுப் பொருந (புறம். 42)

7. புல்லா ரினநிரை செல்புற நோக்கிக்
கையிற் சுட்டிப் பையென வெண்ணிச்
சிலையின் மாற்றி யோனே யவைதாம்
மிகப்பல வாயினு மென்னா மெனைத்தும்
வெண்கோ டோன்றாக் குழிசியொடு
நாளுறை மத்தொலி கேளா தோனே (புறம். 257)

8. அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
தினிநட் டனரே கல்லுங் கன்றொடு
கறவை தந்து பகைவ ரோட்டிய
நெஞ்சுநந்தகை கழிந்தமை யறியா
தின்றும் வருங்கொல் பாணரது கடும்பே (புறம். 264)

9. பருத்தி வேலிச் சீறூர் மன்னன் (புறம். 299)

பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்
புன்புலந் தழீஇய அம்குடிச் சீறூர் (புறம். 324)

10. காட்டொடு மிடைந்த சீயா முன்றில் (புறம். 316)

11. குமிழுண் வெள்ளை மறுவாய் பெயர்த்த
வெண்காழ் தாய வண்காற் பந்தர்
இடையன் பொத்திய சிறுதீ விளக்கத்துப்
பாணரொ டிருந்த நாணுடை நெடுந்தகை (புறம். 324)

12. மென்புல வைப்பினித் தண்பணை யூரே (புறம். 341)
தண்பணைக் கிழவனிவ டந்தையும் (புறம். 342)

13. ஓரெயின் மன்ன னொருமட மகளே (புறம். 338)
எழுவிட் டமைந்த திண்ணிலைக் கதவின்
அரைம ணிஞ்சி நாட்கொடி நுடங்கும் (புறம். 341)

14. தூர்ந்த கிடங்கிற் சோர்ந்த ஞாயில்
சிதைந்த விஞ்சிக் கதுவாய் மூதூர்
யாங்கா வதுகொ றானே (புறம். 350)
வாய்ப்பட விறுத்த வேணி யாயிடை
வருந்தின்று கொல்லோ தானே பருந்துயிர்த்
திடை மதிற் சேக்கும் புரிசைப்
படைமயங் காரிடை நெடுநலூரே (புறம். 343)
மதிலு ஞாயி லின்றே கிடங்கும்
நீஇ ரின்மையிற் கன்றுமேய்ந் துகளும்
ஊரது நிலைமையு மிதுவே (புறம். 355)

15. ஊரெரி கவர வுருத்தெழுந் துரைஇப்
போர்சுடு கமழ்புகை மாதிர மறைப்ப
மதில்வாய்த் தோன்ற வீயாது தம்பழி யூக்குநர்
குண்டுக ணகழிய குறுந்தாண் ஞாயில்
ஆரெயிற் றோட்டி வெளவினை யேறொடு
கன்றுடை யாயந் தரீஇப் புகல் சிறந்து
புலவுவில் விளைய ரங்கை விடுப்ப (பதிற்றுப்பத்து 71)

16. பெருங்களிற் றியானையோ டருங்கலந் தராஅர்
மெய்பனி கூரா வணங்கெனப் பராவலிற்
பலிகொண்டு பெயரும் பாசம் போலத்
திறைகொண்டு பெயர்தி வாழ்க நின்னூழி (பதிற்றுப்பத்து 71)

17. தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன் போரெதிர்ந்து
கொண்டி வேண்டுவ னாயிற் கொள்கெனக்
கொடுத்த மன்னர் நடுக்கற் றனரே
அளியரோ வளியரவ னளியிழந் தோரே
நுண்பல சிதலை யரிதுமுயன் றெடுத்த
செம்புற் றீயல் போல
ஒருபகல் வாழ்க்கைக் குலமரு வோரே (புறம். 51)

எனத்திறை கொடுப்போரின் நடுக்கற்ற நிலையினையும் கொடா தோரின் அழிவுகளையும் புலவர்கள் பிரச்சாரஞ் செய்ததைச் சங்கப் பாடல்கள் உரைக்கின்றன.

18. க. கைலாசபதி, பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், ப. 58

19. 1) பிட்டங்கொற்றன் — சேரமான் கோக்கோதை படைத்தலைவன்
2) பாண்டியன் கீரஞ்சாத்தன் — பாண்டியன் கீழிருந்த குறுநிலமன்னன்
3) நாலைக்கிழான் நாகன் — பாண்டியர்க்குத் துணையானவன்
4) ஈர்ந்தூர்க்கிழான் தோயன்மாறன் — சோழர்க்குத் துணைநின்றவன்

20. வல்லாண்முல்லைத்துறை மேற்சுட்டிய ஐவருக்கு மட்டுமே (குறுநிலமன்னரில்) பாடப்பட்டுள்ளது. இவர்களில் பிட்டங் கொற்றன் இயன்மொழியாலும் பாடப்பெற்றுள்ளான். குறுநில மன்னர்க்கு வல்லாண்முல்லை பாடுவது மிக அரிதாயுள்ளது. மேற்குறித்த (புறம். 170, 178, 179, 180, 181) புறப்பாடல்கள் வல்லாண்முல்லைப் பாடுபொருளில் அமைந்துள்ளனவா என்பதும் இங்கே ஆராயத்தக்கது.

21. புறநானூறு, உ. வே. சாமிநாதையர் பதிப்பு, ப. 488

22. மேற்படி நூல். ப. 488

23. புறநானூறு, கழகப்பதிப்பு, ப. 225

24. சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற்றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற்றானு நனிபல கலத்தன் மன்னே
… … … … … … … …
அம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே
(புறம். 235)

25. புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப்படலம் 23

26. உ. வே. சாமிநாதையர், புறநானூறு, ப. 489

27. பசித்த பாண ருண்டுகடை தப்பலின்
ஒக்க லொற்கஞ் சொலியத் தன்னூர்
சிறுபுல் லாளர் முகத்தளவ கூறி
வரகுகட னிரக்கு நெடுந்தகை
அரசுவரிற் றாங்கும் வல்லா ளன்னே (புறம். 327)

வரகுந் திணையு முள்ளவை யெல்லாம்
இரவன் மாக்களுக் கீயத் தொலைந்தன
... ... டமைந் தனனே
அன்ன னாயினும் பாண நன்றும்
... ...
துடிப்பொடு சிவணிய களிக்கொள் வெண்சோ
றுண்டினி திருந்த பின்றை ... ...
... ... தருகுவன் மாதோ (புறம். 328)

இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்
... ...
அருமுனை யிருக்கைத் தாயினும் வரிமிடற்
றரவுறை புற்றத் தற்றே நாளும்
புரவலர் புன்க ணோக்கா திரவலர்க்
கருகா தீயும் வண்மை
உரைசா னெடுந்தகை யோம்பு மூரே (புறம். 329)

ஏந்துவாள் வலத்த னொருவ னாகித்
தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற்
காழி யனையன் மாதோ வென்றும்
பாடிச் சென்றோர்க் கன்றியும் வாரிப்
புரவிற் காற்றாச் சீறூர்த்
தொன்மை சுட்டிய வண்மை யோனே (புறம். 330)

இல்லது படைக்கவும் வல்ல னுள்ளது
தவச்சிறி தாயினு மிகப்பல ரென்னான்
... ...
வரிசையி னளிக்கவும் வல்லன் (புறம். 331)

28. புறநானூற்றுச் சொற்பொழிவுகள், கழகம், ப. 114

துணை நூல்கள்

1. *குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்* பி. எங்கெல்ஸ், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ 1978.
2. *சங்ககாலச் சமுதாயம்*, கா. சுப்பிரமணியன், நியூசெஞ்சரீ புக் ஹவுஸ், சென்னை, 1982.
3. *தமிழர்சால்பு* (சங்ககாலம்), சு. வித்தியானந்தன், பாரிபுத்தகப் பண்ணை, சென்னை, 1971.
4. 'திணைக்கோட்பாட்டின் சமூக அடிப்படைகள்', கா. சிவத்தம்பி, ஆராய்ச்சி, சென்னை, ஜூலை, 1977, பக். 337-352.
5. *பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்*, க. கைலாசபதி, மக்கள் வெளியீடு, சென்னை, 1978.
6. *பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்*, உ.வே.சா. நூலகம், சென்னை, 1957.
7. *புறநானூற்றுச் சொற்பொழிவுகள்*, கழகம், சென்னை, மறுமதிப்பு 1966.
8. *புறநானூறு* 1-200, ஔவை சு. துரைசாமிபிள்ளை (உரை), கழகம், சென்னை, 1972.
9. *புறநானூறு* 201-400, ஔவை சு. துரைசாமிபிள்ளை (உரை), கழகம், சென்னை, 1973.
10. *புறநானூறு*, நியூசெஞ்சரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1981.
11. *புறநானூறு மூலமும் உரையும்*, உ. வே. சா. நூலகம், திருவான்மியூர், 1963.
12. *புறப்பொருள் வெண்பாமாலை*, உ. வே. சா. நூலகம்; திருவான்மியூர், 1963.

பிழை திருத்தம்

இவ்விதழில் 426 முதல் 432 முடிய உள்ள பக்க எண்கள் பிழையானவை. அவற்றை முறையே 433 முதல் 440 முடியவுள்ள எண்களாகத் திருத்திக் கொள்க.

"அறிவியல் தமிழ்" நூலாசிரியர் [ஓர் மதிப்புரை நோக்கு]

உலக மொழிகளுள் அடைமொழியொடு கூறப் பெறும் சிறப்புத் தமிழ் மொழிக்கே உரியது. செந்தமிழ், நறுந்தமிழ், பைந்தமிழ், தண்டமிழ், கன்னித் தமிழ் என்னும் மொழிப் பண்பினை உணர்த்தும் அடைகளேயன்றித் தெய்வத்தமிழ், திருநெறியதமிழ், முத்தமிழ் என்னும் பொருட்டிறனை அறிவிக்கும் அடைமொழிகளும் உண்டு. இவை யாவும் அதன் அமைப்பினையும் திறனையும் பயனையும் ஓர்ந்துணர்ந்த சான்றோர் துய்ப்பறிவான் வியந்துரைத்த பொருள்சேர் மொழிகளே என்பது நடுவுநின்று ஓர்வார்க்குப் புலனாகும்.

அம்மரபமைய நறுந்தமிழ்க் கவிஞரும் அறிவியலறிஞரும் பைந்தமிழ்ப் பற்றாளரும் பேராசிரியருமான அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் தமிழின உய்வுகருதி விரைந்து வளர்ந்து வரும் விஞ்ஞானக்கலையறிவைத் தமிழ்மொழி வாயிலாகப் பெருவதற்குரிய வழிமுறைகளைப் பல்கால் ஆழ்ந்து சிந்தித்து வரைந்துள்ள இந்நூலுக்கு ''அறிவியல்தமிழ்'' எனப் பெயரிட்டு வழங்கியுள்ளமை உவந்து போற்றற்குரியதொன்றாகும்.

அறிவியல் தமிழ் என்னும் இந்நூற் பெயரான் தமிழ் ஓர் அறிவியல்மொழி, அறிவியலைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது என்னும் நுட்பத்தைப் புலப்படுத்தித் தமிழுக்குப் புதியதோர் அடைமொழியையும் சேர்த்துத் தந்துள்ளார் ஆசிரியர். இவர் வாழையடி வாழையாக வரும் பைந்தமிழ்க் குடிமருவிய செந்தமிழ்ச் சேய்களுள் ஒருவர் எனத் தெளிதற்கு இப்பெயர்க்குறியீடு ஒன்றே சாலும்.

தொல்காப்பியர்க்கும் திருவள்ளுவர்க்கும் பின்தோன்றிய தமிழ் மக்கள் தமிழரசர், தமிழ்ப்புலவோர், தமிழ்க் கலைஞர் முதலானோர் படிப்படியாக ஒவ்வொரு துறையிலும் பிறர்க்கு அடிமையுற்று அவ் அடிமைத்தனத்திலேயே மகிழ்ந்து பெரும்பற்றுடையராய்த் தன்மானமும் மேம்பாடும் இழந்து சிந்தனை வறுமையுற்று வாழ்ந்து சென்றமையும் இன்றைய மக்களாட்சியினும் அவர்வழிவந்த மாந்தர் பலரும் பழம்பெருமைகளைப் பேசிக்கொண்டு போலியாகப் பிறர் உள்ளுள் நகைக்க வாழ்ந்து வருதலை உண்மை வரலாறு உணர்வோர் தெரிவர்.

டாக்டர் வா. செ. குழந்தைசாமி,
அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர்

மக்கள் வாழ்விற்குரிய கலைகள் பல. அவற்றுள் உள்ள துறைகளும் பல. பல்வேறுகலைத் துறைகளுக்குரிய அரும்பெரும் நூல்களைப் படைத்துப்பயின்று வாழ்ந்தஇனம் தமிழினம். ஆயினும், இன்றைய வரலாற்று நூல்களுக்குகேற்பச் சான்று காட்டற்குரிய சுவடுகள் மறைந்தன. அரசியல், வாழ்வியல், இலக்கியஇயல், வானியல் கோளியல் மருத்துவஇயல், பொறியியல், கணிதவியல், இசையியல், முதலாய பலகலைகளும் தொழில்நுட்பநூல்களும் பின்னர் எழுந்த இலக்கியக்கலை, கவின்கலை, மெய்யறிவுக் கோட்பாடுகள் ஆகியவற்றான் புறக்கணிக்கப்பட்டு மறைந்தன எனலாம். இதனை இலக்கியக்கலை ஒன்றற்காகவே ஆக்கப்பட்டுள்ள இலக்கணநூலாகிய தொல்காப்பியம் அவ் ஒருகலையைப் பற்றிய கோட்பாடுகளைப் பலகோணங்களில் அறிவியலுக்கேற்ப விரித் துரைப்பதையும் அஃது ஒரு சுருக்கத்தொகுப்பு நூல் என அதன் பாயிர ஆசிரியர் கூறுவதையும் கொண்டு உய்த்துணரலாம்.

தொல்காப்பியம் தமிழ்மொழியின் இலக்கணம் பற்றிக் கூறும் நூல் எனப்பொதுவாகப் பேசப்படினும் அந்நூலை ஊன்றி நோக்கின் அஃது எழுவகைச் செய்யுள் இலக்கியத்தைப் படைப்பதற்குரிய கோட்பாடுகளை மட்டுமே கூறுதலைக் காணலாம். அவ் இலக்கிய ஆக்கத்திற்குரிய சொல்லமைப்பினை யும் அச்சொல்லமைப்குரிய எழுத்திலக்கண அமைப்பினையுமே அது பேசுகின்றது.

தொல்காப்பியமும்; தொல்காப்பிய நெறியறியாது வடமொழி இலக்கண கோட்பாடுகளைக் கலந்து அதன் சார்பாகச் செய்யப் பட்டுள்ள இடைக்காலப் பிற்கால இலக்கண நூல்களும் அறிவியல் முதலாய பிறகலைகளையும் உள்ளடக்கிய இலக்கணக் கோட்பாடுகளை உடையனவல்ல என்பதைக் கருதுதல் வேண்டும். பிறகலை நூல்கள் அழிந்துபட்டமையான் சான்று காட்டி மேற்கூறிய கருத்தினை வலியுறுத்த இயலாத இன்றைய நிலையில் இவ்வுண்மை சிலர்க்குக் கசப்பாக இருத்தல் கூடும்.

எனினும், இன்றைக்கும் மெய்யறிவு பற்றிய நூல்கள் (சமயம், தத்துவம், அளவை) வடமொழிக்கலைச் சொற்களின்றிப் படைத் தற்காகாமையும், இக்கால அறிஞர்கள் அவற்றை மொழிபெயர்த்து அமைத்து வருவதையும் நோக்கின் மேற்கூறிய உண்மை ஓரளவு புலனாகும்.

எனவே, தனித்தமிழ், தூய தமிழ், மரபுத் தமிழ் என்னும் கொள்கை இலக்கியப் படைப்பிற்கு ஏற்புடைத்தாதலன்றி இன்றைக்கு உலகளாவிய நிலையில் தோன்றி வளர்ந்துவரும்

விஞ்ஞானக் கலைகட்கும், தொழில்நுட்பக் கலைகட்கும், ஏற்குமெனல் திரிபுணர்ச்சியின்பாற்படும்.

இலக்கண இயல்வேறு, மொழியியல் வேறு, இலக்கியக்கலை அல்லாத பிற கலைநூல்களைக் காலந்தோறும் நிகழும் வளர்ச்சி மாற்றங்களுக்கேற்ப அவ்வம் மொழிகளில் ஆக்கிக் கொள்ளுதற்குரிய நெறிமுறைகளை வகுத்துக் காட்டும் கடப்பாடுடையது மொழியியல் இன்றைய மொழியியலறிஞர் அந்நோக்கிற் செயல்படுவதாகக் கூற இயலவில்லை.

மொழி என்பது கருத்துக்களுக்கு இடப்படும் ஒலிக்குறியீடுகளே என்பது யாவரும் அறிந்த ஒன்றாகும். கருத்துக்களும் பொருள்களும் புதியனவாயின் சொற்களும் புதியனவாகவே அமையும், அமைதல் வேண்டும்.

ஒருமொழிக்கண் ஒரு கால எல்லை வரை அமைந்துள்ள சொற்கள். அக்கால எல்லை வரைத் தோன்றி விளங்கும் பொருள்கட்கும் கருத்துக்களுக்கும் உரியவாகத் திகழும். வினைச் சொற்கள் போல, பொருட் குறியீட்டுச் சொற்கள் எக்காலத்திற்கும் உரியவனவாக அமைய மாட்டா. புதிய கருத்துக்களுக்குப் புதிய சொற்களைப் படைத்துக் கொள்வதனால் ஒருமொழி சிதைந்துவிடாது, மாறாக வளப்படும்.

ஒருமொழி திரிபும் சிதைவும் எய்தாமற் பேணுதற்குரிய அடிப்படை அம்மொழியினது எழுத்தொலியமைப்பு-, வேற்றுமைக் கொள்கை வினைச்சொல் இலக்கணம், இடைச் சொல்லாட்சி ஆகியவை இலக்கண நெறி மரபு பிறழாமல் போற்றிக் கொள்வ தாகும். சொல்லாக்க நெறியும், மொழிநடை மரபும் காலந்தொறும் வேறுபடும் இயல்பினவாம். அது காலத்தாற் செம்மையுறும்.

மேற்கூறிய மொழிப் பண்புகளை மிக விரிவாகச் சிந்தித்துத் தெளிந்து இந்நூலாசிரியர் அறிவியற் கலைநூல்களையும் தொழில் நுட்பக் கலைநூல்களையும் கன்னித் தமிழிற் படைத்தற்குரிய ஆக்கமிகு கருத்துக்களை மிகச் செம்மையாகக் கூறுகின்றார்.

உரைநடையாகவும் செய்யுளாகவும் படைக்கப் பெறும் கலை இலக்கிய நூல்கள். இலக்கண நெறி பிறழுமாயினும் பிறமொழிச் சொற்கள் அப்படியே வந்து கலக்குமாயினும் ஒருமொழி வலியிழந்து சிதையும். அறிவியல் முதலாய கலை வளர்ச்சி கருதி ஆக்கப்படும் புதிய சொற்களாலும் அச்சொல்லாக்க முறைகளாலும் ஒருமொழி சிதைந்து விடுமெனக் கருதுதல் ஆழ்ந்துணராத அச்சத்தின்

பாற்படும். மணிப்பிரவாள நடையாலும் வீரசோழியம் முதலாய இலக்கண நூல்களாலும் அழியாத தமிழ்மொழி பிறமொழிப் பயிற்சியாலும், புதிய சொல்லாக்கக் கோட்பாடுகளாலும் அழியா தென்பது உறுதி. ஜனரஞ்சகமென்றும் பேச்சு மொழி என்றும் பட்டாங்கு எழுதுவதே ஜீவனுள்ள உரைநடையென்றும், பிறமொழிச் சொற்களை அவ்வவ்வடிவத்திலேயே கலந்தும் தமிழ்ச் சொல்லுருவங்களைச் சிதைத்தும், எழுத்துக்களை மாற்றியும் இலக்கண மரபுகளைப் புறக்கணித்தும் எழுதும் எழுத்தாளர் களையும், நாளிதழ், கிழமை இதழ்களையும் இனங்காண மாட்டாத தமிழ் பற்றாளர்கள் அறியவிலுக்காக சில மாற்றங்களைச் செய்து கொள்ளுதலை எதிர்ப்பது வியப்பாக உள்ளது.

தமிழ் உணர்வு வேறு, தமிழ் மொழியறிவு வேறு, தமிழ்ப்பற்று வேறு, தமிழ் வளர்ச்சி வேறு, தமிழ்க்காப்பு வேறு, தமிழாக்கம் வேறு தமிழ் விளக்கம் வேறு தமிழ்த் துலக்கம் வேறு என்பதனை இந் நூலாசிரியர் சான்று காட்டி மிக நுட்பமாக விளக்குந்திறன் பாராட்டற்குரியது. ஆசிரியரின் மொழிப்பற்றும், தமிழினப்பற்றும் தமிழ் வளர்ச்சி பற்றிய வேட்கையும் அவரை நமது வணக்கத்திற் குரியவராக ஆக்கி நிற்கின்றன.

இனி இந்நூலைக் ''கருவி வளர்ச்சி, ஆய்வு வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, வினைவலி, அணுகுமுறை அறிவியல் தமிழாக்கம் இற்றைநிலை, அறிவியல் தமிழாக்கம் வழிமுறைகள், எழுத்துச் சீரமைப்பு, துணை வரிவடிவம், அவசரத்தேவை'' என்னும் பத்துத் தலைப்புக்களான் அமைத்துள்ளார். ஒவ்வொரு தலைப்பும் அவரது ஆராய்ச்சித் திறனைக் காட்டுவதோடு அறிவியற்கலை நூல்கள் தமிழ்மொழிக்கண் விரைந்து தோன்ற வேண்டுமென்னும் பேரவாவினைப் புலப்படுத்தி நிற்பதையும் காணலாம்.

கலைச் சொற்களை உருவாக்குதற்குரிய முறைகளுள், கருத்துப் பெயர்ப்பு, மொழிபெயர்ப்பு, ஒலிபெயர்ப்பு, புத்தாக்கம் பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அக்கருத்து வேறுபாடு தமிழால் முடியாது என்னும் முடிபை நோக்கியதாக இருப்பின் அவ்வறிஞர் அஞ்சத்தக்கவராவர். ஓரினம் என்றைக்குத் தமது தாய்மொழி வாயிலாக எல்லாவற்றையும் அறியவும் அறிவிக்கவும் முற்படுகின்றதோ அன்றைக்கு அவ் இனம் பிற இனத்தார் மதிக்கும் வண்ணம் தலை நிமிர்ந்து செம்மாந்து நிற்கும். வாழும், வளரும், அதுவரை ஆங்காங்கே ஓரிரு பேரறிஞர்கள் தோன்றுவர். அவர் உணர்வுகளால் பிறர்க்கு அடிமையாக அமைந்து அடங்கி மறைவர் என்பதை நூலாசிரியர் சொல்லாமற் சொல்லிச் செல்வதைக் காணலாம்.

இந்நூலினது நோக்கங்களுள் எழுத்துச் சீர்திருத்தத்தை வற்புறுத்துதல் தலையாயதெனக்கருதலாம். இங்கு எழுத்தென்பது வரிவடிவ எழுத்தாகும். வரிவடிவம் காலந்தொறும் வேறுபடுதற் குரியதென்பதை வரலாறு காட்டும். தொல்காப்பியர் காலத்தும் சங்கக்காலத்தும் வழங்கிய வரிவடிவம் பல்லவர் காலத்திலும், பல்லவர்காலத்து வரிவடிவம் பிற்காலச் சோழர் பாண்டியர் காலத்தும், சோழர், பாண்டியர் காலத்து வடிவம் இக்காலத்தும் இல்லை. ஒரே காலத்திலுங்கூடக் கல்வெட்டு எழுத்தும் செப்பேட்டு எழுத்தும் ஓலைச் சுவடி எழுத்தும் ஓரளவு வேறு பட்டுள்ளன. எனவே இக்காலச் சூழ்நிலைகளுக்கும், கருவிப் பொருள்களின் வளர்ச்சிக்கும் ஏற்ப வரிவடிவங்களை மாற்றிக் கொள்ள விழைவது தவறாகாது. வரிவடிவம் ஒலிவடிவத்தை உணர அமைத்துக் கொண்ட குறியீடே என்பது யாவரும் அறிந்ததே.

எனினும் வரிவடிவமாற்றத்தைப் பலர் ஏற்க அஞ்சுகின்றனர் மாற்றத்தை விரும்பும் அறிஞர்களாலும் ஒத்த முடிவிற்கு வந்து நடைமுறைப் படுத்தற்கு இயலவில்லை ஏன்? சிந்திக்கவேண்டும்.

வரிவடிவ எழுத்துக்கள் மட்டுமல்ல ஒலிவடிவ எழுத்துக்களும், சொற்களும் குறியீடுகளேயாகும், சொல்லுக்கும் அது குறிக்கும் பொருளுக்கும் மரபைத்தவிர வேறு எவ்வகை உறவுமில்லை. எனினும், எம்மொழியினராயினும் அவர்கள் காலங்காலமாகப் பொருள் பற்றிய சிந்தனைகளைச் சொல்வடிவங்களாலேயே பேசியும் உணர்த்தியும் பழகிவிட்டமையான் சொல்லையும் பொருளையும் ஒன்றாகவே (அபேதமாகவே) காணும் நிலையில் உள்ளனர்.

மக்கள் சடப்பொருளல்லர், உணர்வுப்பிழம்பினர், உணர்வோ சொல்வடிமாக அமைகின்றது அம்முறைமையால் மொழியும் மக்களும் அபேதமாகின்றனர். மொழிக்குஉறுவனவெல்லாம் தமக் குறுவானவாகக் கொள்கின்றனர். அவ்வாறே வரிவடிவங்களை ஒலி வடிவம் போலவே கருதிப் புதிய மாற்றங்களை ஏற்க அஞ்சுகின்றனர்.

வரிவடிவங்களை மாற்றி அமைக்கவேண்டுமென்று முயலுவோர் பெரும்பாலும் பதிப்பச்சுக் கருவிகள், தட்டச்சுப் பொறி, கணிப் பொறி, (கம்ப்யூட்டர்) ஆகியவற்றுற் பயன்கொள்ளுதல், காலச் சுருக்கம், எளிமை சீர்மை ஆகியவற்றைக் கருதியே வற்புறுத்து கின்றனர்.

கையினுல் எழுதுவதைப்பற்றிப் பலர் கருதுவதாகத் தெரிய வில்லை. கையெழுத்துப் பெரும்பாலும் எழுத்துக்கள் ஒன்றோ

டொன்று பிணைந்தும் இணைந்தும் உருண்டும் அமையும் நிலையினதாக இருத்தலின் அதற்கேற்ற வரிவடிங்களையே மக்கள் போற்றிக் கொள்வர். பெரும்பாலோர் வரைந்து காட்டும் சீர்திருத்த எழுத்துக்கள் கையால் எழுதுவதற்கு வாய்ப்புடையனவாக அமையவில்லை. பிணைத்தெழுதுவதற்கு வாய்ப்பாகவும் பிணைத்து எழுதியநிலையினும் பிரித்துணர்தற்கு எளிதாகவும் உள்ள வரிவடிங் களையே மக்கள் விரும்புவர் அதுவே நிலையானதாகவும் அமையும். ஆங்கிலத்திற் கையெழுத்து வடிவம் வேருக அமைந் துள்ளமைக்குக் காரணம் அதுவேயாம்.

இன்றைக்கு எழுத்துச் சீர்த்திருத்தத்தை வற்புறுத்துவோர் பெரும்பாலும் அறிவியல் கலைகளை எண்ணியே வற்புறுத்து கின்றனர். அறிவியல் துறைகளை பயில்வோரும் ஆய்வோரும் சில விழுக்காட்டினரேயாவர். எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் முறையில், கையெழுத்திற்கு வாய்ப்பான முறையில் எழுத்து வடிவங்களை மாற்றியமைப்பதற்குள் விஞ்ஞான வளர்ச்சி பல காதங்களைக் கடந்துவிடும்.

எனவே அறிவியல் கலைத்துறைகளைச் சார்ந்த பேரறிஞர்கள் ஒருங்கிணைந்து அரசின் உடன்பாட்டொடு பதிப்பச்சு, தட்டச்சு, கணிப்பொறிகட்கு ஏற்ப ஒரே வகையாகவோ - தனித்தனி வகையாகவோ வரிவடிவ எழுத்துக்களை அமைத்துக்கொண்டு நாளையே செயல்படலாம். அதற்குரிய தட்டச்சுப் பொறிகளையும், வார்ப்பு எழுத்துக்களையும் சில நாட்களில் செய்துதர ஆவன செய்து சிலருக்குச் சில கிழமைகளுள் பயிற்சியும் தந்துவிடலாம். பொறியியற் கல்லூரி, மருத்துவக்கல்லூரி அவற்றின் தொடர்பான ஆய்வுக்கூடங்களுக்கு மட்டுமே இச்சிறப்புத் தட்டச்சுப் பொறிகள் பயன்படுமாதலின் சில நூறு பொறிகளே தேவைப்படும். மாவட்டத்திற்கு ஓரிரு சிறப்பு அச்சுக் கூடங்கள் போதும். புதிய எழுத்துக்களைப் பிற துறையினரும் பொதுமக்களும் ஓரிரு நாட்களிலேயே பயின்று விடுவர். சுருக்கெழுத்துக்களையும், சங்கேத எழுத்துக்களையும் போல அறிவியல் தமிழ் நூல்களுக்கென ஓர் வரிவடிவம் அமைத்துக் கொள்ளுதலை யாரும் தடை செய்யார். உவந்து போற்றுவர். காலம் கனியக் கனியப் பிற துறையினரும் சிறிது சிறிதாக மேற்கொள்வர். மாற்றங்கள் தாமாக வழக்குப் பெறுதலே வரலாறு.

அலை ஓய்ந்தபின் கடலில் நீராடக் கருதாமல் விரைந்து செயல்படல் வெற்றிபயக்கும் தமிழ் சிறக்கும். தமிழர் வாழ்வர். இத்தகு அறிவியல் சிந்தனைகளை எழுப்பித் தமிழினம் தலைநிமிரத் தொண்டாற்றும். இந்நூலாசிரியர்க்கு உறுதுணையாதல் தமிழர் கடமை. தமிழக அரசின் கடமை. வாழ்க நூலாசிரியர். வளர்க அறிவியல் தமிழ். ச. பாலசுந்தரம்.

பேராசிரியர் N. முத்துக்குமாரசாமி
(தமிழ்ப்பல்கலைக்கழகம்)

புதிய உணர்வுகள், புதிய அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும், புதிய கருவிகளின் உதவியால் புதியன காணும் போதும் புதிய ஒலிகள் உருவாகின்றன. அப்போது புதிய வரி வடிவங்களும் தோன்றுகின்றன. இன்றைய ஒலி, வரிவடிவங்கள் அந்த முறையில் மனிதப் பண்பாட்டுடன் இணையாகப் பரிணமித்தவையாகும்.

கலை, இலக்கியம், சூழல் ஆகியவற்றை மனிதனும் மாற்றுகிறான், அவை தாமாகவும் மாறுகின்றன. இத்தகைய மாற்றங்களை நிறுத்தி வைக்க முடியாது.

ஒரு மொழியை உயிருள்ள மொழியென்றும் அது வளர வேண்டுமென்றும், கூறும்போது அம்மொழியில் மாற்றங்களே கூடாது எனக்கூறுதல் பொருந்தாது. ஒரு மொழி இன்று சிறந்து விளங்குகிறது என்றால் அது பலப்பல மாற்றங்களை அடைந்தே சிறப்பான நிலையை அடைந்திருக்க வேண்டும். ஏனென்றால் எந்த உயிர்ப்புள்ள பொருளும் படைக்கப்படுவதில்லை; முறையாக உருவாக்கப்படுகிறது.

அறிஞர்கள், காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப ஒலி, வரி வடிவங்களை மாற்றாது போனால், அவை தாமாக மாறும். ஒரு மனிதன் தான் பயன்படுத்தும் கருவியைத் தான் மேற்கொண்டுள்ள பணிக்கேற்ப மாற்றி அமைத்துக்கொள்வது போல ஒரு மொழியைப் பேசுவோரும் எழுதுவோரும் தம் வசதிக்கேற்ப அதனை மாற்றி விடுவர். அதனால் மொழி வல்லுநர்களும், துறைவல்லுநர்களும் ஏற்ற மாற்றங்களை உரிய காலங்களில் முறையாகச் செய்வதைத் தம் கடமையாகக் கொண்டாக வேண்டும்.

மதிப்புரை :

களஞ்சியம்

(அறிவியல் துறை) காலாண்டு இதழ்-
முதற்ருெகுதி-முதலிதழ்.

வளர்தமிழ் மன்ற வெளியீடு, அண்ணா பல்கலைக் கழகம், சென்னை. ஆண்டுக்கட்டணம் ரூ 20/- தனி இதழ் ரூ 5.

அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தர் அறிவியற் பேரறிஞர் முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்களை ஆட்சிக் குழுத் தலைவராகப் பெற்றுப் பல்துறை அறிஞர் பதினைவரின் முயற்சியால் நிருவாக ஆசிரியர் பதின்மரைக் கொண்டு அண்ணு பல்கலைக்கழக வளர் தமிழ் மன்ற வாயிலாக அறிவியற்கலை தமிழ்மொழியில் ஆக்கம் பெறுதலைக் குறிக்கோளாகக் கொண்டு வெளிவரும் முத்திங்களிதழ்.

தமிழ் மக்கள் தம் தாய்மொழி வாயிலாக அனைத்து அறிவியற் கலைகளையும் பயிலவும் பயிற்றவும் வேண்டுமென்னும் பேரவா உடையராய்த் தம் குறிக்கோளைப் பல்வகையானும் பரப்பி வரும் பெருமகனாராகிய முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்களது தொண்டின் ஒரு கூறாக இவ்விதழ் வெளிவருகின்றது.

இவ்விதழிறுதியில் வளர்தமிழ் மன்றத்தின் நாற்பெருங் குறிக்கோளும் ஆட்சிக் குழுவினரின் ஒன்பான் செயல் திட்டங்களும் தெளிவுபடுத்தப் பட்டுள்ளன. உயர்ந்த குறிக்கோள்-சிறந்த திட்டம்.

குறிக்கோள்கள் தமிழ்-தமிழின வளர்ச்சியையும், திட்டங்கள் தமிழ்மொழியில் அறிவியற் கலைநூல்கள் படைப்பதையும் அவற்றைப் பெருக்குவதையும் பற்றியனவாக அமைந்துள்ளன.

இவ்விதழிற் பதினெரு பேரறிஞர்தம் கட்டுரைகள் இடம் பெற்றுத் திகழ்கின்றன. அவையாவும் இம்மன்றம் தனது குறிக்கோளை விரைந்து எய்தும் என்பதற்கு எடுத்துக்காட்டாக உள்ளன.

தமிழினத்தின் எதிர்கால வாழ்வு செம்மாப்புடையதாக அமைவதற்கான பெருந்தொண்டினை ஏற்று வரும் இவ்விதழுக்குப் பல்துறைப் பேரறிஞன்மாரும், தமிழ்ப்பற்றாளரும், செல்வரும், அரசும் பேராதரவும் பெருந்துணையும் புரிதல் வேண்டும். நாம் தமிழர் எனக்கருதும் அனைவரது கடமையுமாகும்.

இவ்விதழுள் "நமதுபணி" — "அணுகுமுறை" என்னும் தலைப்பில் முனைவர் வா. செ. குழந்தை சாமியவர்கள் பல அரிய கருத்துக்களைக் கூறுகின்றார்கள். இடையிடையே கையறவாகச் சிலசெய்திகளையும் சொல்கின்றார்கள்.

"பயிற்றுமொழியாகத்தமிழ்" என்னும் தலைப்பில் முன்னாள் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராயிருந்த முனைவர் ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் தாய்மொழிக்கல்வி வாயிலாகவன்றி ஓரினம் முன்னேற இயலாது என்பதனை வற்புறுத்தி அதற்கு இடையூறாகவும் எதிராகவும் உள்ள சில சூழல்களை ஆற்றாமையோடு கூறுகின்றார்கள்.

அவற்றுள் சிலவருமாறு :

"தமிழின் தொன்மை, செம்மை தமிழ்ப்பண்பாட்டின் தனிச் சிறப்பு ஆகியவற்றை மற்ற மொழிக்குடும்பத்தினர் அறியும் வகையில் ஆங்கிலத்திலும் மற்றமொழிகளிலும் ஆய்வு நூல்களை வெளியிடல்"

அறிவியல் பொறியியல் மருத்துவம், வேளாண்மை பொருளாதாரம் சமூகவியல் போன்ற கல்வியறிவுத் துறைகளையும் தன்னுள் கொண்டதாக நமது தாய்மொழி வளர வேண்டும்"

[நமதுபணி பக்-3]

"கடந்த அரைநூற்றாண்டு காலத்தில் நாம் எடுக்காத மாநாடுகள் இல்லை. நடத்தாத ஊர்வலங்கள் இல்லை 'தமிழ் வாழ்க' என நாம் எழுப்பிய ஒலிகள் விண்ணை நிறைத்தன. நமது முயற்சிகள் பெரும்பாலும் பாதுகாப்பு முயற்சிகளாகவும் நமது தமிழ்ப்பற்றின் – மொழி ஆர்வத்தின் வெளிப்பாடுகளாகவுமே பெரும்பாலும் அமைந்து விட்டன" [நமதுபணி பக்-5]

"இனவளர்ச்சி மொழிவளர்ச்சியின் அடிப்படை; இன வளர்ச்சிக்கு எதிரான மொழிக்கொள்கையை நாம் உருவாக்கிக் கொள்ளக்கூடாது. அதனால், இனவளர்ச்சியும் கெடும் மொழி வளர்ச்சியும் கெடும். [அணுகுமுறை பக்-10]

"அறிவுத் துறையில் வளர்ச்சி பெறாத நாடு இனி உலக அரங்கிலே செல்வாக்கோடு வாழ்வது என்பது இயலாது. அறிவுத் துறை வளர வேண்டுமாயின் கல்வித் துறையிலே பற்பல சீர்திருத்தங்களை நாம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்"

[பயிற்று மொழியாகத் தமிழ். பக் - 7]

"உலக நாடுகள் எங்குமில்லாத ஓர் அவலம் இந்த நாட்டிலே இருந்து வருகிறது. கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக

உலகில் உள்ள எந்த நாடும் அயல் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொள்ளவேயில்லை.'' [பயிற்று மொழியாகத் தமிழ் - பக் - 7]

"நம் நாட்டில் என்று தமிழ்மொழியில் படிக்கிறோமோ அன்றுதான் தமிழில் சிந்திக்கும் வழக்கம் வரும். என்று தமிழில் சிந்திக்கிறோமோ அன்றுதான் ஆராய்ச்சியும் படைப்பும் பெருகத் தொடங்கும்'' [பயிற்று மொழியாகத் தமிழ் - பக் - 8]

"இன்றைக்கோ மழலையர் கல்விகூட ஆங்கிலத்தில் தான் தமிழ் நாட்டில் நடைபெற்று வருகிறது. பள்ளிகள் அனைத்திலுமே 1937 க்கு முன்பிருந்ததுபோல ஆங்கிலம் பயிற்று மொழியாக இடம் பிடித்து வருகிறது. இந்த அவல நிலைக்குக் காரணங்கள் பல ...... ஒன்று தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு வர வேண்டுமென்று முயற்சி செய்தவர்களின் பணிக்கு ஊக்கந்தராமல் குற்றங்குறை கண்டு அவர்கள் ஊக்கத்தைக் குலைத்தது ஆகும். இரண்டாவது ஒருபுறத்திலே ஆக்கந்தருவது போலப் பேசிச் செயலுக்கு வரும் பொழுது அதற்கு நேர் எதிரான போக்கை மேற்கொண்டதாகும்''. [,, - பக் - 8]

தமிழிலே விஞ்ஞான நூல்கள் இல்லை, கருவி நூல்கள் இல்லை ஆசிரியர்களால் தமிழில் நடத்த முடியாது என்பன போன்ற குறைகளைச் சொல்லி அவைகளைப் போக்க எந்த விதமான முயற்சியும் மேற்கொள்ளாதது மட்டுமல்லாமல் அம்முயற்சியை மேற்கொண்டவர்களையும் பின்னுக்கு இழுத்தவர்கள் நாட்டில் பரவலாகி விட்டதும் ஒரு காரணம். ஆங்கிலத்தில் படித்தால்தான் மதிப்பு என்ற போலியான எண்ணம் மறைந்து மடிந்து போகின்ற நிலையில் இருந்தபோது அதனை எப்படியோ உயிர்ப்பிக்கச் செய்து இன்று பட்டி தொட்டிகளில் உள்ளவர்கள் கூட இந்த எண்ணத்திற்கு இரையாகி உள்ளதனை நம்மால் உணர முடிகிறது. [பயிற்று மொழியாகத் தமிழ் - பக் - 9]

"இந்தச் சூழ்நிலையில் தாய்மொழியே பயிற்று மொழியாதல் வேண்டும் என்று காந்தியடிகள் முதல் நம் போன்றவர்கள் வரை எவ்வளவுதான் சொன்னாலும் தமிழக மக்கள் சிந்தித்துப் பார்க்கின்ற நிலையில் உள்ளார்களா என்பது என் ஐயமாகவே உள்ளது. இந்திய நாட்டின் பிற பகுதிகளில் தாய்மொழி பயிற்று மொழியாக வந்தாலும் தமிழகத்தில் பயிற்று மொழியாகத் தமிழ் மொழி இடம் பெறுதல் என்பதைத் தமிழ் நாட்டவர்களே விரும்புகின்றார்களா என்பதும் ஐயப்பாடாக உள்ளது'' [,, 9]

"இன்றைய உடனடித் தேவை தமிழை எல்லா மட்டத்திலும் பயிற்று மொழியாக்குதல் அதற்காக வல்லுநர்களும் அரசும் இணைந்து ஆவன செய்ப உடனடியாக முயற்சி மேற் கொள்ள வேண்டும் இதில் தயக்கமோ, தாமதமோ மேற்கொள்வது எதிர் காலத் தமிழகத்திற்கு நல்லதல்ல"

[பயிற்று மொழியாகத் தமிழ் பக். 9]

இங்ஙனம் கையற்றுக் கூறிய இப்பேரறிஞர்களின் உரையை எண்ணின் தமிழ் மொழியை அறிவியல் மொழியாக ஆக்கவும் அறிவியற் கலைகளைத் தமிழ் மொழியில் படைக்கவும் தன்னலமில்லாப் பேரறிஞர்கள் மேற்கொண்ட - மேற்கொள்ளும் தொண்டுகள் எண்ணிய பயனை நல்குமா அல்லது காட்டில் எறிக்கும் நிலவாயும், கடலிற் பெய்யும் மழையாயும், குருடர் முன் ஆடும் நடமாயும், செவிடர் பால் இசைக்கும் கீதமாயும் போகுமா ?

நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடல் வேண்டும். நல்ல போலவும் நயவ போலவும் வல்லாங்குப் பேசியும் நடித்தும் வஞ்சனை புரிவோரை இனங் கண்டுணர்தல் வேண்டும். கரவாளர் தம் மாய உரைவலையிற் சிக்கிக் கிடக்கும் மக்களை மீட்டல் வேண்டும். தமிழாற் பெற்ற கலையறிவைக் கொண்டு தரணியில் எவ்விடத்தும் செயலாற்றவியலும் என்னும் நம்பிக்கையை ஊட்டுதற்குரிய செயல்களை மேற்கொள்ளல் வேண்டும் எந்நிலையிலும் எவ்விடத்திலும் தமிழுக்கே அரசு முதன்மைதரும் என்னும் நிலையை உண்டாக்குதல் வேண்டும். அறியாமையாலும் அடிமைத்தனத்தாலும் மயங்கிக் கிடக்கும் பெற்றோர்களின் மன இருளைப் போக்க ஆக்கபூர்வமான செயலைச் செய்தல் வேண்டும். இன்றைய நிலை எதிர்காலத்தில் மாறிவிடும் எனக் கருதுதல் கூடாது. இன்றைய கரவாளர் தம் வாரிசுகள் அன்றுமிருக்கும். உண்போரின் உடல் நிலையை மட்டுமன்று உளநிலையையும் நோக்கியே மருந்து கூட்டுதல் வேண்டும். இன்றேல் எதிரான விளைவே உண்டாகும்.

எனவே இன்றைய நிலையில் அறிவியற் கலைவளர்ச்சிக்கு எவ்வளவிற்குத் திட்டமிடப்படுகின்றதோ அவ்வளவிற்கும் அதிகமாகவே வழி தவறி மயங்கி நிற்கும் மக்களின் அறியாமையைக் களைதற்கும், திட்டமிட்டுச் செயலாற்றுதல் வேண்டும். அஃது அவசரத் தேவையுமாகும்.

பதிப்பாசிரியர்

ச. பாலசுந்தரம்

எனது கருத்து

பேராசிரியர் N. முத்துக்குமாரசாமி
(தமிழ்ப்பல்கலைக் கழகம்)

கட்டுரைகளைப் படிக்கும் போது பல கருத்தரங்குகளில் கேட்டவையும், கட்டுரைகளில் படித்தவையும் நினைவுக்கு வருகின்றன. திரும்பத் திரும்ப எண்ணங்களை அசைபோடுகிற போக்கினை நிறுத்தி அறிவியல் உணர்வு மக்களைச் சென்றடைய முயற்சி மேற்கொளல் வேண்டும்.

இன்றைய களஞ்சியம் அறிவியல் உணர்வைப் பள்ளிகளுக்குக் கூட எடுத்துச் செல்லும் வாய்ப்பினைப் பெற்றிருக்கவில்லை. ஆதலால், களஞ்சியம் கீழ்க்காணும் பணிகளையும் மேற்கொண்டால் தமிழ்கூறும் நல்லுலகம் நலம் பெறும்.

1. பள்ளிகளில் அறிவியல் பாடம் நடத்தப் புது உத்திகளையும் நடைமுறைகளையும் கூறுதல். ஆசிரியர்களுக்குக் கருத்தரங்குகள் நடத்தி அளிக்கும் பயிற்சிகளை இந்த ஏட்டின் வழியாகச் சிறுகச் சிறுகச் செய்தல்.

2. தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களில் நடைபெறும் அறிவியல் ஆய்வுகளின் கட்டுரைகளைத் தமிழில் வெளியிடுதற்குக் களஞ்சியம் பயன்படலாம். ஆய்வாளர்களின் ஆங்கிலக் கட்டுரைகளை வாங்கித் தமிழ்ப்படுத்தி, ஆசிரியரின் ஒப்புதலுடன் அவற்றை வெளியிடலாம்.

3. கலைச்சொல் மையம் ஒன்று அமைத்துத் துறைச் சொற்களைத் தொகுத்து, ஒவ்வொரு பாடப் பிரிவிற்கும் ஒரு விளக்கப் பொருள் அகராதி தயாரிக்கலாம்

4. வளர்தமிழ்] மன்றம் நாளேடுகளுக்கும், ஏடுகளுக்கும் நல்ல அறிவியல் கட்டுரைகளை அனுப்பி வெளியிடச் செய்யலாம். இதற்கெனத் தனிக்குழு ஒன்று அமைத்துச் செயல்பட வேண்டும்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கதையாசிரியர்களும் உத்திகளும்

பேராசிரியர் இரா. சண்முகவேலன்
அ. வீ. வா. நி. புட்பங்கல்லூரி,
பூண்டி.

> ...தமிழ்ப் பாஷைக்கு நாவல் முற்றும் 'நாவலாதலால், (புதிதாதலால்) ஒரு விஷயம் கூறத்தக்கது. கிரந்தத்தின் இடையிடையே கீழ்த்தரப் பாத்திரங்கள் பேச நேரும் பொழுது, இலக்கணவழுச் செறிந்த அவர் வாய்மொழி களை அவ்வண்ணமே எழுதுவது வழக்கமாயினும், கிரந்தகர்த்தா நேரிற்கூறும் வரலாறுகள் வழுவின்றி யிருத்தல் வேண்டும்; கல்வித் தேர்ச்சியில்லாரும் பயன் பெறும்படி எழுதப்படும் கிரந்தமாதலின் எவ்வளவு இலேசான நடையிலெழுதப்படினும் நலமே; ஆயின், எளிதிற் பொருள் தெளிதல் கருதி இலக்கண வழுக்களோடு எழுதப்படின், படிப்பவருள் இலக்கணம் பயின்றார். வெறுப்பையும், அப்பயிற்சியில்லார் அவர்களுள் முக்கியமாய் இவ்விதக் கதைகளைப் பெரும்பாலும் வாசிப்போராகிய இலக்கணமறியாப் பெண்பாலர் வழுக்களை யறியமாட்டாராய், மயக்கத்தையும் அடைவராதலின், நன்னடையி லெழுதுவதே தகுதியாம்.[100]

என்று ஆசிரியர் தம் காலத்து நாவல்கலையின் கொள்கைகளையும் அவற்றில் தாம் கொண்டுள்ள கொள்கையையும் வரையறுத்துக் குறிப்பிடுவது கருதற்பாலது. எனவே, மேற்போந்த இரு நாவலாசிரியர்களும் தத்தமக்குள் கொண்டுள்ள கொள்கைகளுக் கேற்பவே தத்தமது படைப்புக்களில் கொள்கையை ஓர் உத்தியாகக் (Theory as Technique) கையாண்டுள்ளனர் என்பதை அறியலாம். இதனைப் போன்று ஈழத்து நாவலாசிரியர் இளங்கீரன் பேச்சு மொழியைத் தம்முடைய நாவல்களில் எந்தச் சூழலிலும் கையாள்வ தில்லை. கதை மாந்தரின் இயல்புக்கும் சூழலுக்கும் ஏற்ப மொழியையும் உரையாடலையும் பயன்படுத்தாமல் தம் எண்ணங்களைக் கதைமாந்தர்களின் வாயிலாகப் பேசவைக்கும் முயற்சியினாலேயும் தமது மொழிக் கொள்கையினாலேயுமே சொற்பொழிவு பாணியான – செயற்கையான உரையாடல்கள் அமைவது இவருடைய நாவல்களில் காணலாம் *நீதியே நீ கேள்* (1962) என்னும் நாவலில் ஆயிஷாவும் அன்சாரியும் (தாயும்

மகனும்) உரையாடுகின்ற நிலையில் அன்சாரி 'உம்மா' என்று அழைப்பதற்குப் பதிலாக 'அம்மா' என்று அழைப்பது சமூக உறவு களில் மொழி வேறுபடுவதைக் கூட ஆசிரியர் தமது மொழிக் கொள்கையினால் தவிர்த்திருப்பதாகத் திறனாய்வாளர் மதிப்பிடுவது[101] நினைத்தற்குரியது.

19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் நாவலாசிரியர்களாகிய மாயூரம் ச. வேதநாயகம் பிள்ளை, திரிசிரபுரம் சு. வை. குருஸ்வாமி சர்மா, பண்டித ச. ம. நடேச சாஸ்திரி, பி. ஆர். ராஜமய்யர், அ. மாதவய்யா, தி. ம. பொன்னுசாமிப் பிள்ளை போன்றோர் பொதுக் கொள்கையாகவும் - காலக் கொள்கையாகவும் அற முரைத்தலைக் கைக் கொண்டனர். இக் கொள்கையினுள்ளே ச. ம நடேசசாஸ்திரியார் இன்ப மூட்டலையும், பி. ஆர். ராஜமய்யர் தத்துவத்தையும், அ. மாதவய்யா சீர்திருத்தத்தையும் தத்தமது கொள்கைகளாகவும் கொண்டுள்ளனர். தி. ம. பொன்னுசாமிப் பிள்ளையும், ''சைவ சித்தாந்தம் இவர்க்கு மிகவும் பிடித்தமான கொள்கை என்பதை நாவலின் அகத்தும், அதன் தலைப்பிலும் உணர முடியும்''[102] என்பாரின் கூற்றினால் தனிமனிதக் கொள்கை உடையவர் என்பது விளங்குகிறது. இவருடைய *கமலாக்ஷி* (1903), *ஞானாம்பிகை* (1913), *ஞானசம்பந்தம்* (1913), *ஞானப்பிரகாசம்* (1920) போன்ற புதினங்களின் பெயர்கள் ஆசிரியரின் சைவ சித்தாந்த கொள்கைப் பிடிப்பை மறைமுகமாகக் காட்டவல்லனவாகும். மேலும், தாம் எழுதிய *விஜயசுந்தரம்* (1910), *கமலாக்ஷி*, *ஞானாம்பிகை*, *ஞானசம்பந்தம்*, *ஞானப்பிரகாசம்*, *சிவஞானம்* (1920) ஆகிய ஆறு நாவல்கள் ஒவ்வொன்றிலும் பத்தொன்பதாம் இயலில் ஒரு பிரசங்கியாரைக் கொண்டு *சிவஞான சித்தியாரைக்* குறித்து நீண்ட சொற்பொழிவினை நிகழ்த்தச் செய்துள்ளார். சான்றாக :

சாமியார் : சத்தாகிய சிவனது சந்நிதியில் அசத்தாகிய பிரபஞ்சம் சீவியாதென்றும் ஆன்மாவின்கண் சீவிக்குமென்றும் கூறுவதெவ்விதம் ?

பிரசங்கியார் : அநாதியாகிய பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் களுள் பதியும், பசுவும், நித்தவியாபக சித்தாக விருப்பது உண்மையேயாயினும், நின்மல உண்மை ஞானமே திருமேனியாயுள்ள சிவத்தினிடத்தில் அசத்தாகிய பாசம் ஜடமாகையால் சென்று பொருந்தாது. ஆணவம், கன்மம், மாயை என்ற மலங்களெல்லாம் ஆன்மா விடத்திலேயே பொருந்தும்.

சாமியார் : ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றும் ஆன்மாவை எப்பொழுது பொருந்தியது ?

பிரசங்கியார் : பதி என்றுண்டோ அன்றே பசு உண்டு ; பசு என்றுண்டோ அன்றே பசுவை மறைத்து நிற்கும் பாசம் உண்டு. எதுபோல் என்னில், கடல் நீர், உப்புப் போலாம். அதை விளக்கிக் காட்டின், நீருக்கிடங்கொடுத்திருக்கும் ஆகாயம் போல் பதியும், அவ்விடத்தில் நிறைந்து நின்ற நீரைப் போல் ஆன்மாவும், ஆகாயத்திற்றோயாது அந் நீரைப்பற்றி யிருக்கும் உப்புப் போலவே பாசமும் என்றறிவீராக. திரிபதார்த்தங்களும் அநாதியாய் நிற்கு முறை இவ்வாறே.

சாமியார் : ஆன்மாவின் தன்மை தானென்ன ?

பிரசங்கியார் : சிவனறிவிக்க ஆன்மா அறிவதாலும், ஒரு காலத்திலும் அழிவின்றி நித்தியமாய் நிற்பதாலும், குறிக்கப்பட்ட ஆணவ மலத்தாலே அநாதியே பந்திக்கப்பட்டுத் தூல வறிவாயிருப்பதாலும் அசேதனமென்று ஆன்மாவைச் சொல்லுவார்கள். கர்த்தாவோ நித்தியனும் அநாதி முத்த சுத்த சித்த ரூபனுமாய் நிற்பன். இவன் ஆன்மாக்கள் மேல் வைத்த காருண்ணியத்தால் அநாதியே ஆன்மாக்களுக்குள்ள பாச பந்தங்களின் வல்லமையைக் கெடுத்துப் பரமுத்தியைக் கொடுப்பான். *சிவஞானம்* பக். 222 - '23)

இத்தகையத் திட்டமிட்ட செயற்பாடு ஆசிரியர் தம்முடைய கொள்கையை வலியுறுத்த மேற்கொண்ட உத்திப் பாங்கினையே தெளிவுபடுத்துகின்றது.

வ. ரா. பாரதியுடன் பழகி அவரைப் போலவே சமுதாயப் புரட்சியாளராக உருவானார் ; தம் பூணூலை அறுத்தெறிந்து விட்டுத் 'தீண்டத்தகாதவர்' என்று அழைக்கப்பட்டவர்களைத் தம் இல்லத்திற்குள் அனுமதித்து அவர்களுடன் ஒன்றாக அமர்ந்து உணவு உண்டார். அவருடைய தெரு வழியே அரிஜனப் பிணம் செல்லக் கூடாது என்று ஒருமுறை தடுக்கப்பட்ட போது அதனை எதிர்த்து வ. ரா. வலிமையாகப் போராடினார் ; வேற்று சாதிப் பெண்ணை மணந்தார் ; நாட்டு விடுதலை, பெண் விடுதலை ஆகிய இரண்டினையும் இரு கண்களாகக் கொண்டார். எனவே,

"வ. ரா. மனிதனுடன் பழகுவதில்லை ; கொள்கைகளுடன் தான் பழகினார்'' என்று ஒரு சந்தர்ப்பத்தில் ஸ்ரீ ந. பிச்சமூர்த்தி குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் கருத்து ரொம்ப சரியானது. வ. ரா. வின் எழுத்துக்கள் இதைத்தான் நிரூபிக்கும் அது கட்டுரை ஆனாலும் சரி, கதை, நாடகம், நாவல், சம்பாஷனை எதுவானாலும் சரி''[103] என்று மதிப்பிடுவர். வ ரா. எழுதிய நான்கு நாவல்களுள் *சின்னச்சாம்பு* (1942) நீங்கலாகப் பிறவற்றில்-சுந்தரி (1917), *விஜயம்* (1934), *கோதைத் தீவு* (1945) ஆகியவற்றில் பெண் விடுதலையையும், பெண்கள் முன்னேற்றத்தையுமே பாடு பொருளாக்கியுள்ளார். அத்துடன் தம் கொள்கையை விளக்கவும் எடுத்தியம்பவும் கதைகளின் இடையிடையே தோன்றுகிறார் ; கதை மாந்தர்களின் உரையாடல்களின் வாயிலாகப் பெண் கல்வி, விதவை மறுமணம் உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களை வெளிப்படுத்துகின்றார். கதைகளின் இயக்கங்களைக் கூடத்தடுத்திடுமாறு அவருடைய பல்வேறு பொருள்கள் பற்றிய கட்டுரை போன்ற எண்ணங்களும் கருத்துக்களும் மேலோங்கி நிற்கின்றன. *விஜயத்தில்* தம்கருத்துக்களுக்குத் துணையாக டால்ஸ்டாயின் *அன்னா கரீனினா*வின் கதைச் சுருக்கத்தையும், ரவீந்திரநாத் தாகூரின் *வீடும் வெளியும்*, விக்டர் ஹியூகோவின் *ஜீன் வெல் ஜீன்*, பாரதியாரின் *சந்திரிகையின் கதை* ஆகியவற்றின் கருத்துக்களையும் மேற்கோள்களாகக் காட்டியுள்ளார். *கோதைத் தீவில்* பெண்களாலேயே ஆளப்படும் ஒரு நாட்டின் மாண்புகளை *உட்டோபியா* (Utopia) உத்தியில் சித்திரித்திருக்கின்றார். ஓரிடத்தில் கோதையார் எழுந்து நின்று பின் வருமாறு பேசுகின்றார்.

பெரியோர்களே ! பெண் விடுதலையில் ஆர்வம் கொண்டு தான் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். மேலும், பெண் விடுதலையைப் பற்றிக் கூச்சல்பட்டி ஆடவர்கள் என்ன கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறியும் பொருட்டே நான் இன்றைக்கு இங்கே வந்தேன். சில பெரியோர்கள் இப்பொழுது பேசுவார்கள். அவர்கள் பேசி முடிந்த பின்னர் விஷயம் ஏதேனுமிருக்குமாகில் பின்னர் பேசுகிறேன்'' என்று ஆசனத்தில் அமர்ந்தார். பல பிரசங்கிகள் பேசினார்கள். அவர்கள் பேசினதை நான் இங்கு விரித்துக் கூறச் சம்மதிக்கவில்லை. சாரத்தை மட்டும் சொல்லி விடுகிறேன். "பெண்கள் விடுதலை பெற்றாலின்றி நாடு சுதந்திரம் பெற முடியாது. பெண்கள் கல்வி கற்க வேண்டும். நாகரிகத் துறையில் தங்களைப் பழக்கிக் கொள்ள வேண்டும். பொது விஷயங்களில் அவர்கள் அதிகமாக ஈடுபட வேண்டும். ஆண்களுடன் தாங்களும் சமம் என்று

பெண்கள் எண்ணிக் கொள்ள வேண்டும். வீட்டுக்குள்ளாகவே அவர்கள் எப்போதும் அடைந்து கிடக்கலாகாது". இது சாரம் விரித்து எழுதினால் ரொம்ப தூரம் நீண்டு போகும். புலவர்கள் கூறுவது போல, விரிவஞ்சி விடுக்கின்றோம். (**கோதைத்தீவு**, ப.54)

கதையில் ராமன் கூறும் மேற்கண்ட பகுதி உண்மையில் வ. ரா. வின் கூற்றும் கொள்கையும் ஆகும்.

கி. ராஜநாராயணன்,

> என்னுடைய மக்கள் பேசுகிற பாஷையில் அவர்கள் சிந்திக்கிற மனோ இயலில் அவர்கள் வசிக்கிற சூழ்நிலையில் அமைய வேண்டும் என்னுடைய சிருஷ்டிகள் என்று நினைக்கிறவன் நான். அவர்கள் சுவாசிக்கிற காற்றின் வாடை, அவர்கள் பிறந்து விளையாடி நடந்து திரிகிற என் கரிசல் மண்ணின் வாசமெல்லாம் அப்படியே என் எழுத்துக்களில் கொண்டு வந்துவிட வேண்டும் என்பது என்னுடைய தீராத விருப்பம். இந்த மண்ணை நான் இவ்வளவு ஆசையோடு நேசிக்கிறேன்.[104]

என்று கூறுவதால் அவருடைய இலக்கியக் கொள்கை யாது என்பது தெளிவாகிறது. இக்கொள்கைக்கேற்பவே அவர்தம் நாவல், சிறுகதைகளில் கரிசல் காட்டின் மண்ணின் மணமும், அம்மண்ணின் மைந்தர்களும், அவர்தம் பழக்க வழக்கங்களும் தொட்டவிடமெல்லாம் குத்திட்டு நிற்கின்றன. பின்னணி, பாத்திரப்படைப்பு, உரையாடல், மொழிநடை, வருணனை, பழமொழி, உவமை முதலானவற்றில் கி. ரா. தம் கொள்கையை நழுவ விடாமல் முனைப்பாகவே செயல்படுத்தி வருகிறார்.

ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக அந்த மூலையில் அவருடைய துண்டத்தில் செம்மறி ஆடுகள் வந்து சேர்ந்த வண்ணமாக இருந்தன, ஒவ்வொரு ஆடு வந்து சேர்ந்ததும், அதன் பெயரை மனசுக்குள் சொல்லிக் கொண்டார் கிட்ணக் கோனார்.

> செவ்வாடு
> அரியாடு-இவைகள் தனி சுத்தச் 'சிகப்பு'
> கருங்காத்து வெள்ளை-உடம்பு பூராவும் வெள்ளை ;
> காதுகள் கருப்பு
> செங்காத்து வெள்ளை
> வெங்காலாடு-தனி ஒரு நிறத்தில், காலில் மட்டும்

ஒரு புள்ளி
மறை-தனி ஒரு சுத்த நிறத்தில், ஒரு பட்டை வேற்று நிறம்
போர்-இரண்டு நிறங்கள் காணுவது
கரும்போர்
செம்போர்
வெள்ளைப்போர்
தவிட்டுப் போர்
மூளி-காது குறை
தாலி-கழுத்தின் கீழ் இரண்டு தொங்கட்டான்கள்.
கூளி-வளர்ச்சி குன்றிய குட்டை
கறுவி-உடம்பு சிகப்பு ; அடி வயிற்றுக் மட்டும் கருப்பு வெள்ளைப் போர்
சென்றாயாடு- சிகப்பு உடம்பில் அடி வயிற்றுக் கருப்பில் செம்போர்
கரிசையாடு-கருப்பு மிஞ்சின சிகப்பு
கரிசைப் போர்
கண்ணாடிப் போர்-கருப்பு மிஞ்சின சிகப்பில் வெள்ளைப்போர்
கம்பளியாடு- கருப்பு மிஞ்சின சிகப்பில், துடைகளிலும் முன் சப்பையிலும், முதுகு எலும்பு, புருவங்களிலும் தாரை தாரையாக கருப்புக் கோடுகள்.
சுட்டி — தலையில் வெண்புள்ளி
வெண்தலை
கொப்பாடு — கொம்பு இருக்கும் பெண் ஆடு
கிடா — கொம்புள்ளது ; ஆண்.
மோளைக்கிடா — கொம்பில்லாதது.
கொச்சைக்கிடா — விதையில்லாதது ; பிறவியிலேயே.

(கிடை — 1968, அநுசுலை, பக். 115 / 16.)

இந்த நுணுக்கமான புள்ளி விவரம் நம்மை அந்தக் 'கிடை'யின் பக்கமே இழுத்துச் செல்வதுடன் அந்தக் கிடை'யின் கோனாரை யும் நம் கண்ணெதிரில் கொண்டுவந்து நிறுத்துகின்றதன்றோ ? "கரிசல் மண் குறித்த கி. ராஜநாராயணனின் அறிதல் வியக்கத் தக்கது. இவரளவுக்குத் தமது சூழ்நிலையை விளங்கிக் கொண்ட கலைஞர்கள் மிகவும் குறைவு"[105] என்பது ஆசிரியருடைய கொள்கை யின் வெற்றிக்குக் கொடுக்கப் பெற்ற நற்சான்றுரையாகும்.

பி. வி. ஆர். தம் கதைக் கொள்கையைக் கீழ்க்காணுமாறு வெளிப்படுத்துகிறார் ;

என்னுடைய சிறுகதைகளிலும் நாவல்களிலும் சம்பவங்கள் நிறையவோ, பெரிதாகவோ இருப்பதில்லை. இருக்க வேண்டிய அவசியமும் எனக்குத் தோன்றவில்லை. நான் முக்கியத்துவம் கொடுப்பது ஜீவனுள்ள உரையாடல்களுக்கும், மனித உணர்ச்சிகளின் பிரதிபலிப்புகளுக்கும்தான். உரையாடல்களின் மூலம் பாத்திரங்களின் குணாதிசியங்களைக் கூறுவதுதான் சிறந்த முறை என்று நான் கருதுகிறேன்.[106]

இவருடைய கொள்கைக்கேற்பவே இவர் தம் படைப்புக்களில் நிகழ்ச்சிச் சித்திரிப்புக் குறைவாகவும் கதைமாந்தரின் உரையாடல்கள் மிகுதியாகவும் உள்ளன. இவரின் *பஞ்சகல்யாணி* (1971) என்னும் நாவலில் மூன்றில் ஒரு பங்கு நிகழ்ச்சிகளும் இருபங்கு உரையாடல்களும் இடம்பெற்றிருப்பதை இங்கு ஓர் உதாரணத்திற்குக் குறிப்பிடலாம். இந்த நாவலின் இரண்டாவது இயலில் ஓர் இடத்தின் கண் அமைந்துள்ள உரையாடல் இது :

மவுண்ட் ரோடு.
விட்டில் ஆனந்த் தியேட்டர்.
''ஹாய், கமல் !''
''ஹாய், ராஜா !''
''ஏன் இவ்வளவு லேட் கமல் ?''
''நீ ஏன் இவ்வளவு சீக்கிரமே வந்து விட்டாய் ராஜா !''
''நீ சீக்கிரமே வந்துடுவேன்னு நினைச்சேன் !''
நீ நினைக்கிறபடி நான் இருக்கக் கூடாதுன்னுதான் லேட்டா வந்தேன்.
''உள்ளே போகலாமா?''
''ரொம்ப தாகமாக இருக்கு''
''பாண்டா... மங்கோலா?'' பாண்டா
இருவரும் பாண்டா சாப்பிட்டார்கள்.

(*பஞ்சகல்யாணி*, பக். 29–30)

இவ்வெடுத்துக் காட்டில் இடம், நிகழ்ச்சி பற்றிய செய்திகள் குறிப்புரை அளவில் சிறுத்துக் காணப்படுவதை அறியலாம். ஆகவே, ஆசிரியர் தம் கதைக் கொள்கையை உரையாடல் உத்தியின் (Dialogue) மூலம் நிறைவேற்றிக் கொள்கிறார் என்பது தெளிவு.

தொடர்ந்து உறுதியுடன் கைக் கொள்வதையே கொள்கை என்கிறோம். இக்கொள்கையில் தமக்குத் தாமே எதிர் முகாமை எழுப்பிக் கொண்டு கதையாசிரியர்கள் சோதனை செய்து பார்ப்பதும் உண்டு. அப்படிப் பட்ட கொள்கை எதிர்ப்பில் அல்லது

சோதனையில் அவர்கள் இறங்கி வேடிக்கை காட்டுபவர்களாகவும் புதிய பயிற்சி பெறுபவர்களாகவும் இருக்கின்றனர். கோமதி சுவாமிநாதன்

> சாதாரணமாக, வாழ்க்கையில் நான் அடிக்கடி பார்க்கும் நபர்களை வைத்துக் கொண்டே, நான் அனுபவித்த ரசித்த பல சந்தர்ப்பங்களுடன் அந்த நபர்களை இணைத்து ஆங்காங்கு குறைந்த அளவில் கற்பனையின் உதவியை நாடி நவீனங்கள் எழுதிப் பழக்கமுள்ளவன். சிறுகதைகள், நாடகங்கள் கூட எனக்கு நிஜமாகவே அறிமுகமான, உயிருள்ள நபர்களைப் பாத்திரங்களாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற கொள்கை யுடையவன்.[107]

என்பர். இக்கொள்கையை இவரே எதிர்த்துச் சற்றும் முன்பின் பார்த்தறியாத கதை மாந்தர்களை முற்றிலும் கற்பனையின் துணையுடன் படைத்துப் *பாசத்திற்கு அப்பால்......* (1970) என்னும் புதினத்தை எழுதியுள்ளார். இவரே,

> இப்படி பழக்கத்திற்கு அடிமையான நான், இந்த நவீனத்தை எழுத ஆரம்பித்த போது மாத்திரம் ஒருவித லட்சிய ஆர்வத்தால் — அதாவது நம்மாலும் இயலும் என்று தெரிந்து கொள்ள — தெரியாத கொஞ்சங்கூட முன்பின் தெரியாத பாத்திரங்களை வைத்துக் கொண்டு — ஏதோ, மனத்தின் அடித் தளத்தில் தேங்கியிருந்த — என்னுடையது என்று சொல்லிக் கொள்ள முடியாத — நினைவுகளை அந்தப் பாத்திரங்கள் மீது போர்த்தி எழுதி முடித்தேன்.[108]

என்று மேலும் குறிப்பிடுகிறார் எனவே, அவருடைய கொள்கைக்கே அவர் எதிர்ப்புத் தெரிவித்து வெற்றியும் பெற்றுள்ளார் என்பதை அவர்தம் படைப்பில் கைக் கொண்ட உத்திகளே சான்று பகர்கின்றன. லண்டனில் நடந்ததாகக் கற்பனை செய்யப்பட்ட நிகழ்ச்சியினையும், கதைப் போக்கினையும் ஆங்கில நாவல் ஒன்றிலிருந்து நினைவு கூர்ந்து எடுத்துக் கொண்டு அவற்றிற்குத் தமிழ் வடிவம் கொடுத்துப் பின்னப்பட்டதே அந்த நாவல். லண்டனுக்குப் பதிலாகச் சென்னையையும் சென்னையைச் சுற்றிய பகுதிகளையுப் கதைக் களங்களாக மாற்றினார் தேவராஜ் அண்ட் கோ' என்ற இயந்திரப் பொருள்களை விற்பனை. செய்கின்ற நிறுவனம்

சென்னையில் இருந்தது. அது தேவராஜன், நாகராஜன் எனும் இரு சகோதரர்களுடையது. அறிவு, ஆற்றல், பண்பு ஆகியவற்றில் இருவரும் இரு துருவங்கள். தேவராஜன் தொழில் அதிபர். நாகராஜன் ஆராய்ச்சியாளர். தேவராஜன் குடிகாரன்; பெண் பித்தன். நாகராஜன் பண்பாளன்; ஏழைகளின் பங்காளன். நாகராஜன் தொழிலாளர்களின் நலன்களுக்காகவும், நண்பன் தாசுதேவன், அவன் காதலி வத்சலா ஆகியோருக்காகவும் தன் தமையனைக் கொலை செய்ததோடு தானும் தற்கொலை செய்து கொண்டான். சுருக்கமாகக் கதை இதுதான். ஆசிரியர் தம் கொள்கைக்குப் புறம்பாகப் போக விழைந்ததால் என்றோ படித்திருந்த கதையை இரவல் வாங்கிக் கொள்கிறார்; கதைப் பின்னல், கதை மாந்தர் படைப்பு முதலானவற்றில் தழுவல் (adaptation) உத்தியினையே தலையாயதாகக் கொண்டுள்ளார். தேவராஜனின் கொலை தொடர்பாக நடைபெற்ற விசாரணைகளும், நிகழ்ச்சிகளும், பேராசிரியர் மோஹன் குமாரின் துப்பறியும் பணியும் துப்பறியும் கதையின் தன்மையைத் தெளிவுபடுத்துகின்றன. குறிப்பாக, நாகராஜன் குற்றவாளி என்று கைது செய்யப்பட்டு வழக்கின் முடிவில் குற்றமற்றவன் என்று விடுதலை பெறுவதும், தேவராஜனைக் கொலை செய்தவர் யார் என்பது குறித்துப் புதிர் நிலையில் (suspense) கதைப்பின்னலை அமைத்திருப்பதும் முன்னர்க் கூறியபடி ஆசிரியர் தம் கொள்கையில் சோதனை செய்து பார்த்ததனாலேயாம்.

பேராசிரியர் மோஹன் குமாரிடம் நாகராஜன் தன் அண்ணனைத் திட்டம் போட்டுக் கொன்றது பற்றிக் கூறிவருவது தான் நாவலின் இறுதிக் கட்டமாகும். அவ்வாறு அவன் சொல்லுகையில், பேராசிரியர் அவனைப் பாராட்டி அவனுடைய நோயை மருத்துவச் சிகிச்சையால் குணப்படுத்திக் கொள்ளலாம் என்று கருத்துரைக்கின்றார். ஆனால், அவன் நிலை இப்படி ஆகின்றது.

"பிரயோசனமில்லை புரொபசர்! நீங்கள் அனாமதேயம் என்றீர்களே! உடனே கையிலிருந்த காப்ஸ்யூலை இந்தத் தண்ணீரில் போட்டேன். கதை சொல்லும்போது குடித்தேன். இனி யாரும் என்னைக் காப்பாற்ற முடியாது புரொபசர்!" ... நாகராஜன் வெறி பிடித்தவன் போல் சிரித்தான். புரபெசரும் ராஜாராமும் சிலையாக நின்றார்கள்.

(*பாசத்திற்கு அப்பால்* ..., ப. 118)

கதை முடிகிறது. இவனது இத்தகைய முடிவு நாவலைப் படிக்கும் எவரும் எதிர்பாரதது. ஓ. ஹென்றி, மாப்பசான், சாமர்சட்மாம்

ஆகியோர் கையாண்ட வியப்பூட்டும் முடிவு (surpriseending) உத்தியை ஆசிரியர் இக் கதையில் தம் வழக்கத்திற்கும் கொள்கைக்கும் மாறாகப் பயன்படுத்தியுள்ளார். அதற்குக் காரணம், ஆசிரியரின் முன்னேற்பாடான கொள்கைச் சோதனையே.

தொடர்ச்சி அடுத்த இதழில்

குறிப்புகள்

1. ... சிறு சிறு பொரியாக மனதில் விழுந்து என் மனக் கர்ப்பத்தில் வளர்ந்து - தவிர்க்க முடியாத அவஸ்தையாய் - நிர்ப்பந்தமாய் ஆகி - எழுதியே தீர வேண்டும் என்று என்னை வற்புறுத்துகிற இந்த உணர்வுகளுக்குத் தீனி போடவே நான் எழுதுகிறேன் என்பது உண்மை.

— அரவிந்தன், 'முன்னுரை', *கரும்பலகைகள் சற்றுக்கொடுப்பதில்லை.*

2. வெறும் பொழுதுபோக்கு அடிப்படை மட்டுமன்றி சமூக சீர்த்திருத்தக் கருத்துக்களையும் உணருர்படியாக இணைந்து கதை அமையவேண்டுமென்ற என்னுடைய நோக்கத்தை இந்நூல் எவ்வளவு தூரம் நிறைவேற்றுகிறது என்புதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்,

— ''ரசம்'', 'முன்னுரை', *திருவாளர் ஆளவந்தார்.*

91. Novelise have glven mony reasons for writtings novels. Richardson believed he did so to inculcate right conduct, Fielding to reform the maners of the oge, Dickens to expose social evils, trollope to make money by providing acceptable entertainment.

— Walter Allen, *The English Novel* - A Short Critical History, PP—14—15.

92. Philip Stevark, *The Theory of The Novel*, *PP. 157-165.*

93. ரா. தணவன், 'சிவசொற்கள்', *காதலோ காதல்!*

94. டாக்டர். மா. இராமலிங்கம், *நோக்கு நிலை*, பக். 128

95. A hiterative with broader aims, without conscious propaganda, on some theme that has little to do with

economics or politics, may be neglected today but widely nead by the next generation.

— Henry Hazlitt, 'Literature Versus opinion', *The writer and His Craft*, *pp. 53-54.*

96. The Aim of the writer of fiction is not to instruct but to please

— N. S. Subramaniyan, *Movements in Modern English Novel*, p. 65.

97. Tamil novelists have always been writing and are writing with the twin purpose of effecting social and political reform.

— Loganayagy Nannithamby, *Women in Modern Tamil*, P. 107.

98. The aim of the writer may be to represent reality, but the medium he uses to do. This is language, and there is no way in which happenings in the real world can be represented in language without distortion.

— I. Ian Milligan, *The Novel in English*, P. 16.

99. டி. கே. துரைசாமி, 'அசோக மித்திரனின் தண்ணீர்', *விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்கள்*, ப. 162.

100. அ. மாதவய்யா, 'முகவுரை', *பத்மாவதி சரித்திரம்*, ப. 3

101. எம். ஏ. நுஃமான், *திறனாய்வுக் கட்டுரைகள்*, ப. 60

102. டாக்டர் தா. வே. வீராசாமி, *தமிழ் நாவல் முன்னோட்டம்*. ப. 21.

103. சி. சு. செல்லப்பா, 'முகவுரை', *சொர்க்கத்தில் சம்பாஷணை*.

104. கி. ராஜநாராயணன், 'நானும் என் எழுத்தும்', *வேட்டி* ப. 121.

105. கோ. கேசவன், *ராஜநாராயணீயம்*', ப. 64.

106. பி. வி. ஆர்., 'நானும் என் எழுத்தும்', *பஞ்சகல்யாணி*, ப. 12.

107. கோமதி சுவாமிநாதன், 'முன்னுரை', *பாசத்திற்கு அப்பால் ...!*, ப. 3.

108. மே. நூ. ப. 4.

பாரதியின் புதிய ஆத்திசூடி

சு. பாரதி,
தமிழ்த்துறை,
காயிதே மில்லத் அரசு
மகளிர் கல்லூரி, சென்னை-2

கவிஞர்கள் காலத்தால் உருவாக்கப்படுகின்றனர். அவருள்ளும் மிகச் சிலரே காலம் கடந்தும் போற்றப்படுகின்றனர். ஏனையோர் காலவெள்ளத்துள் அமிழ்ந்து விடுகின்றனர். ஆனால் பாரதியோ காலத்தை வென்றவர். அவரது கவிதைகள் புகழ்பெறக் காரணமாக அமைந்தது அவர் வாழ்ந்த காலச் சூழலே. இந்திய விடுதலைப் போராட்டம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் தம் எழுச்சி மிக்க பாக்களால், மக்கள் உணர்ச்சியைத் தட்டி எழுப்பினார். அவர் முதியவர்களுக்கும் பாடினார். சின்னஞ்சிறிய குழந்தைகளுக்கும் பாடினார். ஔவையார் ஆத்திசூடியைப் பயின்று அதில் பல்வேறு புதுமையைச் செய்து 'புதிய ஆத்திசூடி'யாகப் படைக்கிறார்.

பாரதியின் கவிதைகளில் அங்கங்கே கூறியுள்ள பல கருத்துகள் புதிய ஆத்திசூடியில் மெருகேறி ஒளிர்கின்றன. பாமரரும் உணர்ந்து கொள்ளத்தக்க கருத்துகளைச் சுருக்கமாகக் கூறியுள்ளார். இதில் வருகின்ற கருத்துகள் பாரதி தம் பிற கவிதைகளில், காவியங்களில், கதைகளில் கூறிய கருத்துக்களின் சாரமாக அமைந்துள்ளன. தற்காலக் குழந்தைக் கவிஞர்களின் முன்னோடி பாரதியே எனலாம். புதிய ஆத்திசூடி குழந்தைகளுக்காக மட்டும் பாடப்பட்டதன்று. முதியவர்களும் படித்து உணர்ந்து கொள்ளத் தக்க கருத்துப் பேழை அது. உணர்ச்சிப் பெட்டகம் அது. சிறியது எனினும் செறிவு மிக்கது. ஔவையைப்போல ஆத்திசூடி என்னும் பெயரைத் தம் நூலுக்குச் சூட்டினாலும் அவரது கருத்துகள் பலவற்றில் முரண்படுகிறார் பாரதியார். ஔவையார் கூறியதைப் போன்ற அமைதியான அறிவுரைகள் தம் காலத்தில் வாழ்ந்த மக்களுக்குத் தேவையில்லை என்றுணர்ந்து உணர்ச்சி ஊட்டும் ஆணைகளை இடுகின்றார். பாரதி தமது ஆத்திசூடியில் நாட்டு விடுதலை உணர்வை முதன்மையாகவும், சமுதாய உணர்வை இரண்டாவதாகவும் வைத்துப்பாடியுள்ளார். ஆத்திசூடிப் பாடல்கள் ஒவ்வொன்றையும் பார்க்கும்போது மேற்கண்டவற்றுள் ஏதாவது ஒன்று மிகுந்திருப்பதைப் பார்க்கலாம்.

பழமையில் சிறந்தவற்றைப் போற்றிய பாரதி புதியவற்றை இருகரம் நீட்டி வரவேற்கிறார். தேவையான போது புதியவற்றை

ஏற்றுக் கொள்வதே பொருத்தம் என்பதை உணர்ந்த அவர் 'புதியன விரும்பு' என்று பாடியதில் வியப்பில்லை எங்கும் எதிலும் புதுமையைக் காண விரும்பும் பாரதி புதிய ஆத்திசூடியில் 'பரம்பொருள் வாழ்த்து'ப் பாடும்போது கூடப் புதுமையாகவே சிந்திக்கின்றார். "தெய்வம் ஒன்றுதான் அதனை அடையும் வழிகளே சமயங்கள். வழிகள் வேறுபடினும் சென்று சேருமிடம் ஒன்றே. சிவனென்றும் திருமால் என்றும் அல்லா என்றும் ஏசு என்றும் பலப்பல மதத்தினர் உணர்ந்தும், உணர்தற்கு இயலாது பரவிடும் பரம்பொருள் ஒன்றே என்று பாடிய முதற்கவிஞனும் கடைசிக் கவிஞனும் பாரதியே"[2] பரம்பொருள் ஒன்றே எனப் பாடியவர் பலர். ஆனால் பல பெயர்களில் இறைவனைக் குறிக்கும் பல மதத்தாரும் பரவிடும் பரம்பொருள் ஒன்றே. அதனை நான் வாழ்த்துகிறேன் எனச் சமயசமரசப் பரம்பொருள் வாழ்த்துப் பாடிய புலவர் பாரதிதான்.

பாரதி தமது ஆத்திசூடியில் '110' தொடர்களைக் கூறுகிறார். 'அச்சந்தவிர்' என்பதுவே அவர் கூறும் முதல் அறம். அகரத்தில் தொடங்கும் சொற்கள் பல இருக்க, மேற்கண்டவாறு பாரதி கூறக் காரணம் உண்டு. அந்நியனின் ஆட்சியில் அடிமை மோகம் கொண்டு வாழும் மக்களைப் பார்த்து,

'அச்சமில்லை! அச்சமில்லை அச்சமென்பதில்லையே' என்று பாடியவர். அச்சம் தான் மனிதன் முன்னேற்றத்தைத் தடுக்கும் முதல் எதிரி. அச்சத்தை நீக்கினால் சுதந்திரமாகச் செயல்படலாம் என்று நம்பினார்.

> "நெஞ்சு பொறுக்கு திலையே — இந்த
> நிலை கெட்ட மனிதரை நினைத்து விட்டால்
> அஞ்சி அஞ்சிச் சாவார் — இவர்
> அஞ்சாத பொருளில்லை அவனியிலே"[3]

என்று அவர் வாழ்ந்த காலப் பாரத மக்களின் நிலையைப் பாடினார். இவ்வாறு அஞ்சி அஞ்சிச் செத்துக் கொண்டிருந்தால் அடிமைத் தளையில் இருக்கும் மக்களை மீட்டல் இயலாது என்றுணர்ந்து முதல் அறமாக 'அச்சந்தவிர்' என்று அறிவுறுத்தினார். சிறு குழந்தைகள் கூட அச்சத்தை நீக்கி வாழ வேண்டும் என எண்ணியவராய்ப் பாப்பாப் பாட்டில், 'தவறு செய்பவர்களைக்

1. பாரதியின் புதிய ஆத்திசூடி — 61
2. பாரதி உலககவி — மு. அப்துல்கரீம் — பக்கம் 29.
3. பா. கவிதைகள்—தேசிய கீதங்கள் —பாரத ஜனங்களின் தற்கால நிலைமை.

கண்டால் நீ பயங்கொள்ளாதே' அவர்களை மோதி மிதித்து விடுவது மட்டுமல்ல, அவர் முகத்தில் உமிழ்ந்தே விடு, என்று பாடுகிறார்.

தெய்வத்தைப் பற்றிப் பாடும் போது கூட, விநாயகர் நான்மணி மாலையில்,

'அச்சமில்லை, அமுங்குதலில்லை
நடுங்குதலில்லை, நாணுதலில்லை
பாவமில்லை, பதுங்குதலில்லை
ஏது நேரினுமிடர்ப்பட மாட்டோம்
அண்டஞ் சிதறினா லஞ்ச மாட்டோம்[4].

என்று கூறுகிறார். அவர் பாடல்களைப் படிக்கும் கோழைக்குக் கூடத் துணிவு வரும். அந்நியர்களின் ஆதிக்கப் போக்கை அச்சமின்றிச் சாடிப் பாடினார். பத்திரிகையில் தீவிரமாக எழுதினார். அதனால் அவர் பாடல்களைப் படித்த மக்கள் உணர்ச்சி பொங்கி எழுந்தனர். ஆத்திசூடியில் வரும் முதல் அறம் மட்டுமன்று, பின்னால் வருகின்ற அறங்களும் முதல் அறத்தின் எதிரொலியாக ஒலிக்கின்றன.

'கீழோர்க்கஞ்சேல், கேட்டிலுந் துணிந்து நில்
கொடுமையை எதிர்த்து நில், சாவதற்கஞ்சேல்
சிதையா நெஞ்சுகொள், தீயோர்க் கஞ்சேல்
தொன்மைக் கஞ்சேல், பேய்களுக் கஞ்சேல்[5]

என்று பல இடங்களிலும் அச்சத்தை நீக்க வேண்டும் என்பதையே தம் குறிக்கோளாகக் கொண்டு கூறுகிறார். அச்சத்தைப் போக்குவது தான் விடுதலை உணர்வின் முதற்படி என்பதால் 'அச்சந்தவிர்' என்று முதற்கண் கூறுகிறார்.

அடுத்து அச்சத்தை நீக்கி விட்டால் ஆண்மை உறுதிப்படும். நாட்டு விடுதலைக்கு ஆண்மை உடையவர் தாம் நிரம்பத் தேவை என்றே 'ஆண்மை தவறேல்'[6] என்று கூறுகிறார். சத்ரபதி சிவாஜி தன் படைகளுக்கு,

---

4. பா. கவிதைகள் — விநாயகர் நான்மணிமாலை – அகவல்
5. பா. கவிதைகள் — புதிய ஆத்திசூடி 16, 20, 23, 26, 27, 45, 51, 72
6. பா. கவிதைகள் — புதிய ஆத்திசூடி - 2

'ஆணுருக் கொண்ட பெண்களு மலிகளும்
வீணிலிங் கிருந்தெனை வெறுத்திடல் விரும்பேன்
ஆரியரிருமின் ! ஆண்களிங் கிருமின் !
வீரியமிகுந்த மேன்மை யோரிருமின் ! !'[7]

என்று கூறும் போது வீரமிக்க, ஆண்மை மிக்க இளைஞர்கள் தாம் நாட்டுக்குத் தேவை என்பதை வலியுறுத்துகிறார். வளம் மிக்க நம் நாட்டை மாற்றானிடம் பணயம் வைத்து விட்டு நம்மை நாமே தாழ்வாக நினைத்தல் கூடாது என்பதற்காகவே 'இளைத்த லிகழ்ச்சி'[8] என்கிறார். உள்ளத்தாலும் உடலாலும் நாம் இருக்கும் நிலையினின்று கீழே இறங்கக் கூடாது. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்றிருந்தால் தான் சுதந்திரம் அடைய முடியும் என்ற கருத்தில் கூறுகிறார்.

மேலும் உடலை உறுதியாக வைத்துக் கொண்டால் தான் அந்நியனை எதிர்த்து நிற்க முடியும்

"நோய்களற்ற உடலினாய் வா வா வா' என்று வருகின்ற பாரதத்தை வாழ்த்தியவராயிற்றே! எனவே 'உடலினை உறுதி செய்'[9] என்று மக்களுக்கு அறிவுறுத்துகிறார். உடலை உறுதியாக வைத்திருக்க நல்ல சத்துள்ள உணவாக உட்கொள்ள வேண்டும். நோயற்ற வாழ்வு வாழ, நாம் உண்ணும் உணவுப் பொருட்களே காரணம் எனவே ஊட்டச் சத்துள்ள உணவை நாம் உண்ண வேண்டும் என்ற பொருளில் 'ஊண்மிக விரும்பு'[10] என்று பகன்றார்.

அத்துடன் சுதந்திரப் போரில் ஈடுபடுகின்றவர்களுக்கு 'ஏறுபோல் நட, ஓய்தல் ஒழி, குன்றென நிமிர்ந்து நில் கூடித் தொழில் செய், கோல்கைக் கொண்டு வாழ், செய்வது துணிந்து செய், தாழ்ந்து நடவேல், தேசத்தைக் காத்தல் செய் தோல்வியில் கலங்கேல், நேர்படப் பேசு, நையப்புடை, போர்த் தொழில் பழகு, முனையிலே முகத்து நில்'[11] என்று வீரம் செறிந்த அறிவுரைகளைக் கூறுகிறார். அப்பொழுது தான் 'நம் தாய்நாடு' என்ற உணர்ச்சி தோன்றி அந்நியனை எதிர்த்து நின்று ஓய்தலை ஒழித்து,

---

7. பா. கவிதைகள்—தேசிய இயக்கப் பாடல்கள்—சத்ரபதி சிவாஜி தன் சைனியத்திற்குக் கூறியது.
8. பா. கவிதைகள்—புதிய ஆத்திசூடி 3
9. பா. கவிதைகள்—புதிய ஆத்திசூடி 5
10. பா. கவிதைகள்—புதிய ஆத்திசூடி 6
11. பா. கவிதைகள் — புதிய ஆத்திசூடி 8, 11, 17, 18, 19, 23, 31, 43, 49, 52, 61, 62, 74, 79.

ஒன்றுபட்ட உணர்ச்சியுடன் செயலாற்றி, சோர்வை நீக்கி, எதையும் துணிந்து செய்யவேண்டும் என்ற உணர்ச்சி தோன்றும். அவனிடம் பணிந்து போகாமலேயே, நம் தேசத்தைக் காக்க வேண்டும். தோல்வி வந்தாலும் கலங்காமல், மாற்றானை விரட்டி, புடைக்க வேண்டிய சமயம் வந்தால் புடைத்து, போர்த் தொழிலில் வீரத்தோடு ஈடுபட முடியும். இவை அனைத்தும் சுதந்திரம் எனது மூச்சு என்று இறுதிவரை வாழ்ந்த பாரதியின் கருத்துகள்.

இங்குப் பல இடங்களில் ஒளவையின் கருத்தோடு முரண்படுகிறார் பாரதியார். ஒளவையார் தனி மனிதன் விடுதலை அடைய வேண்டும் என்ற எண்ணத்தோடு ஆத்திசூடியைப் பாடினார். பாரதியார் அரசியல் விடுதலைக்காகப் புதிய ஆத்திசூடியைப் பாடினார். 'போர்த்தொழில் புரியேல்' என்பது ஒளவையின் கூற்று. பௌத்த சமண சமயங்களின் ஆதிக்கத்தால் மக்கள் இவ்வுலக வாழ்க்கையில் ஆர்வம் இழந்தனர். மறு உலக வாழ்வு பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தனர். துறவு பிரசித்தி பெற்றது. மித வாழ்வு வலியுறுத்தப்பட்டது. தனி மனித வீடு பேற்றினைத் தருகின்ற எல்லா நற்செயல்களும் சடங்கு முறையில் செய்யப்பட்டன'[12]. அக்காலப் போர்களால் மக்கள் அடைந்த இன்னலைப் போக்கவே 'போர்த்தொழில் புரியேல்' என்றார் ஒளவை. ஆனால் பாரதியார் வாழ்ந்த காலம் அந்நியனை நாட்டை விட்டு விரட்டுவது என்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்த காலம். எனவே 'போர்த்தொழில் பழகு'[13] என்று நாட்டில் உள்ள மக்களுக்குக் கூறுகிறார்.

'வெட்டெனப் பேசேல்' என்பது அமைதியை விரும்பிய ஒளவையின் கூற்று. வெடிப்புறப் பேசினால்தான் அந்நியன் அஞ்சி ஓடுவான் என்பது பாரதியின் கூற்று. 'முனை முகத்து நில்லேல்' என்பது ஒளவை கூற்று 'முனையிலே முகத்து நில்'[14] என்பது அந்நியனை விரட்ட வீரத்தோடு பாடிய பாரதி கூற்று. நாடு அடிமைப் பட்டிருக்கும் போது வீடு பேற்றினைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பது நல்லதன்று. நாட்டிற்காகப் போர் முனைக்குச் செல்லத் தயங்கக் கூடாது என்பது பாரதியின் கூற்று.

---

12. பாரதி பாநிலை — கா. மீனாட்சி சுந்தரனார் - பக்கம் 63.
13. பா. கவிதைகள் — புதிய ஆத்திசூடி-74
14. பா. கவிதைகள் — புதிய ஆத்திசூடி 79

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1.	Tamil Literature — Prof. M. S. Purnalingam Pillai	உரு. 85/— U. S. $ 17
2.	மொழி நூல் — மாகறல் கார்த்திகேய முதலியார்	உரு. 75/—
3.	Tamil University Machine Translation System (TUMTS) Co-authors : K. C. Chellamuthu K. Rangan K. Murugesan	Rs. 75/— U. S. $ 15
4.	A Study on the Thanjavur Art Plate — Prof. P. Saravanavel	Rs. 60/— U. S. $ 12
5.	நாமதீப நிகண்டு — கல்லிடை நகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்	உரு. 68/—
6.	மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் — பேரா. கா. சுப்ரமணியப் பிள்ளை	உரு. 45/—
7.	Indians in South Africa — Prof. K. Nambi Arooran	Rs. 60/— U. S. $ 12

விற்பனைக் கழிவு : அஞ்சல் வழி 25%
நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்குப் பெறும்படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

கரந்தைத் தமிழ்ச் சங்கவெளியீடுகள்

யாழ் நூல் — விபுலானந்த அடிகள்	ரூ. 50
கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்)	ரூ. 30 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ. 60 00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ்	ரூ. 6 00
கபிலர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ 4 00
நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ. 3 00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞனத்தின் வழக்கீடு - பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ 2 00
கவியரசு நினைவு மலர்	ரூ 1 00
தமிழரசி குறவஞ்சி	ரூ. 0 62
சிவமும் செந்தமிழும்-பாவலர் ச. பாலசுந்தரம்	ரூ 0 25

பிற வெளியீடுகள் :

கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்) பேராசிரியர் ச. பாலசுந்தரம்	4 50
கலைக்கூத்தன் கவிதைகள்	ரூ 6 00

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி.
நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613002.

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. **இராமநாதன்,**

தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர் **க. வெள்ளைவாரணன்,**

142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி **சு. செல்லப்பன்,** எம். ஏ., பி. டி., பி. எல்.,

இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை.

டாக்டர் **தமிழண்ணல்,** எம். ஏ., பிஎச். டி.,

தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்,

டாக்டர் **சி. பாலசுப்பிரமணியன்,** எம்.ஏ., எம்.லிட், பிஎச்.டி.

தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் **பி. விருத்தாசலம்,** எம். ஏ.,

முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2,

பேராசிரியர் **சி. கோவிந்தராசன்,**

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் **ஆ. பாலன்,** எம். ஏ., எம். ஃபில்.,

துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

புலவர் **மீனா. இராமதாசு,** எம். ஏ.,

தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2

திரு. **பா. மதிவாணன்,** எம். ஏ., எம். ஃபில்.,

துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர்

பேராசிரியர் **ச. பாலசுந்தரம்**

Regd. No. TN/TB/24.

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு 7. ஆசிரியர்,
தஞ்சை சரபோசி மன்னர் சரஸ்வதி
மகால் நூல் நிலைய இதழ்,
அரண்மனை,
தஞ்சாவூர்.

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரு.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரு.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரு.	250 00	600 00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.